

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூலை – 2018

மலர் - 50 இதழ் - 06

✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........................ 01

திருச்சபையில் மறுமலர்ச்சி ................. 02

கடுகுக்கதை ........................................ 04

குறுங்கதை ........................................... 05

தொண்டனில் சில நிமிடம் .................. 07

சார்லி சாப்ளின் ...................................... 09

மாணவர் பக்கம் ..................................... 10

வினாவிடைப் போட்டி .......................... 11

சின்ன விசயங்கள் சிறந்த ................... 12

ஆசுகவி வேலுப்பிள்ளை ....................... 12

உலகின் முதல் அம்புலன்ஸ் ............. 13

மருத்துவம் ............................................ 14

வத்திக்கான் செய்திகள் ..................... 15

கத்தோலிக்கத் திருஅவையின் ........... 16

இதுதான்டா அரசியல் .......................... 18

விடை தெரியாத வினாக்கள் ............... 20

எண்ணிப்பார்க்கையில் ......................... 21

இலக்கிய மஞ்சரி ................................. 22

அழகு ........................................................ 23

ஏன் இந்தக் கோலம் ............................. 25

திருவிவிலியம் கற்போம் ..................... 27

அறிவை வளர்ப்போம் .......................... 28


✱ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்) ✱


SOCIAL COMMUNICATIONS CENTRE
**P.O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL : 065 2226486**
**E-MAIL : battiscc@gmail.com**

விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

**"இருக்கும் இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியமே"**

ஒரு மனிதன் அவனது வயதுக்குச் சரியான வாழ்க்கையை ஒழுங்காக வாழ்கின்றான் என்பதற்கு எது அடையாளம்? அவன் எங்கு எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்கிறான் என்பதே அடையாளம். ஆனால், இன்று வாழ்க்கையில் மிகப் பெரிய சிக்கல் எது என்று பார்க்கிறபோது யாரும், எதுவும் இருக்க வேண்டிய இடத்தில் இருப்பது இல்லை.

ஆசிரியர்கள் குருவாக வழிகாட்டியாக இருப்பதில்லை
கல்விக் கூடங்களை அறிஞர்கள் நடத்துவதில்லை
அரசியல்வாதிகள் தலைவர்களாக விளங்குவதில்லை
தலைவர்கள் தியாகங்களைச் செய்யத் துணிவதில்லை
தியாகிகள் ஆட்சிக்கு வரமுடிவதில்லை
ஆட்சியாளன் வியாபாரி ஆகிவிட்டான்
வியாபாரி ஆட்சியாளன் ஆகிவிட்டான்
ஞானமில்லாதவன் கல்வித் தந்தை ஆகிவிட்டான்
கல்வி கடைச்சரக்காகிவிட்டது
கடைச்சரக்கு கலப்படமாகிவிட்டது
எதுவும் அதனிடத்தில் இல்லாமல்
மற்றொரு இடத்தில் நின்று நிலைக்கத் தொடங்கிவிட்டது

மனிதன் ஆசையாலும் எதிர்பார்ப்பாலும் துரத்தப்படுகின்றான். ஆசை அடுத்தவனோடு நம்மை ஒப்பீடு செய்யத் தூண்டுகிறது. அதுமட்டுமல்லாமல் அடுத்தவனது வாழ்க்கைக்குள் எம் வாழ்க்கையைத் தேடவைக்கின்றது. விளைவு நம் வீட்டுக் கண்ணாடியே நம் முகத்தைக் காட்ட மறுக்கின்றது. அதனால் யார் எங்கு இருக்கவேண்டுமோ அங்கு இருந்தால்தான் நலம். இல்லாவிட்டால் அது எவராக இருந்தாலும் எப்போதும் பிரச்சினையாகத்தான் இருக்கும்.

ஒட்டகத்தின் குட்டியொன்று தன் தாயிடம் புலம்பியது. இறைவன் கொடியவன் இப்படிப்பட்ட அசிங்கமான இமைகளை ஏன் படைத்தான்? தாய் சொன்னது, பாலை நிலத்தின் மணற்காற்றில் நம் கண்களைப் பாதுகாக்க. போகட்டும், கால்களை ஏன் குச்சிபோலப் படைத்தான். புதையும் மணலில் எம்மைப் பாதுகாக்க. முதுகில் ஏன் இப்படி ஒரு பாரம். உணவும் நீரும் பாலை நிலத்தில் கிடைப்பது கடினம். கிடைக்கும்போது சேமிக்க என்றது தாய். இவை எல்லாம் பாலை நிலத்திற்கு உதவும். நாம் இருப்பதுவோ மிருகக்காட்சிச்சாலையில். இவற்றிற்கு என்ன பயன் என்றது.

இறைவன் யார் எங்கு எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழவேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறான். மனிதன்தான் அதை மாற்ற முயல்கிறான். கேட்டால் அறிவின் முதிர்ச்சி என்கிறான்.

எல்லாம் நிரந்தரம் என்று நினைக்கின்றான் மனிதன். கவியரசு பாடுகின்றார், "மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்கும் என்று. இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று"

சிந்திப்போம்! கடமைகளைச் சரிவரச் செய்வோம்!
கட்டுப்பாட்டோடு இருப்போம்!
பிறரை மதிப்போம்!
இறைவன் அருளைப் பெறுவோம்!




- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருச்சபையில் மறுமலர்ச்சியை விதைத்த
# புனித லொயோலா இஞ்ஞாசியார்

யூலை மாதம் பிறந்தாலே எம் மனக் கண்களிலே முதலில் தோன்றும் புனிதர், இயேசு சபையை நிறுவியவரும், எமது மறை மாவட்டத்தின் பாதுகாவலருமான புனித லொயோலா நகர் இக்னேசியஸ் என்றால் மிகையாகாது. எனவேதான் இவ்விதழில் அவர்தம் வாழ்வில் ஒளிரும் "வரலாற்று ஒளிக்கீற்றுக்கள்" சுருக்கத்தையும், அவர் நிறுவிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட எதிர் மதச் சீர்திருத்தப் பணிகளையும், சபையின் வளர்ச்சியையும், தற்காலத்தில் அவர்கள் மேற்கொள்ளும் பல்தரப்பட்ட சமய, சமூகப் பணிகளையும் சிறப்பாக எமது மறைமாவட்டத்தில் இயேசு சபை யினர் காலடி எடுத்து வைத்த நாள் முதலாய் மேற்கொண்டு வரும் அரிய பெரிய பணிகளையும் கருத்தில் கொண்டு நன்றியுடன் நினைவு கூரவும் விழைகின்றேன்.

புனித லொயோலா இஞ்ஞாசியாரின் காலம் 1491-1556ஆகும். இவர் இனிகோ என்ற இயற் பெயரைக் கொண்டிருந்தார். அரண்மனையில் வளர்ந்தார். 14 ஆண்டுகள் காஸ்டல் அரசின் நிதி மந்திரியின் பொறுப்புமிக்க அமைச்சராகப் பணியாற்றினார். நாவாப் அரசப் பிரதிநிதியுடன் சேர்ந்து பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராகப் போரிட இராணுவத்தில் சேர்ந்தார். 1521, மே - 21இல் பாம்பலூனாவில் போர்புரியும்போது குண்டடிபட்டு கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது இவருக்கு வாங்கிக் கொடுத்த நூல்கள் இவரை ஆன்மிகத் தாகத்தில் வழிநடத்தின. விசேடவிதமாக சாக்கனியின் கார்த்தூசியன் துறவி லுடால்ப் எழுதிய 'கிறிஸ்துவின் சரிதை', ஜேசேலிபஸ் வோராஜின் எழுதிய 'புனிதர்களின் வரலாறு' ஆகிய நூல்களைப் படித்தார். 'புனித அசிசி பிரான்சிஸ்', 'புனித சுவாமிநாதர் சரிதைகள்' இவரை மிகவும் கவர்ந்தன. "இப்புனிதர்களைப் போல் நானும் ஏன் கிறிஸ்துவின் வீரனாகக் கூடாது" என்ற எண்ணம் அவருக்குள் தோன்றியது.

இதைத் தொடர்ந்து எருச லேமிற்குத் திருப்பயணம் மேற்கொண்டார். "எல்லாம் அதி உன்னத இறைவனின் மகிமைக்காக" (AMDG) என்னும் விருது வாக்குடன் செயல்பட்டார். மோன்சேராத் நகரில் உள்ள துறவியர் ஆலயம் சென்று இறைவனின் தாய்க்கு வணக்கம் செலுத்தியபின், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, தனது இராணுவத் தளவாடங்களையும், ஆயுதங்களையும் அகற்றிவிட்டு வாளை பீடத்தில் வைத்து இரவு முழுவதும் செபித்தார். மரியன்னை தன் மகன் இயேசுவுடன் அவருக்குக் காட்சியளித்தார். ஆடம்பர உடைகளை ஓர் எளியவனுக்கு அளித்தார். 11 மாதங்கள் மன்ரேசா குகையில் தங்கி தியானம் செய்தார். ஆன்ம நலமும், தொண்டு மனமும் பெற்றார். கடின தவ முயற்சிகளில் ஈடுபட்டதுடன், உலகின் ஆன்மீகவாதிகளை மட்டுமல்லாது, சமயம் தாண்டிய சமூகவியலாளர்களையும் மனமாற்றத்திற்கு இட்டுச் சென்ற 'ஆன்மிகப் பயிற்சிகள்' (Spiritual Execises) என்ற தியான நூலை எழுதினார். மரியாவின் ஆசியுடன் இந்நூலை எழுதியதாகவும் புனித லொயோலா இஞ்ஞாசியார் கூறியுள்ளார். மேலும், இங்கே 'கிறிஸ்து நாதர் அனுசாரம்' எனும் நூலையும் எழுதினார்.

1523இல் எருச லேம் வந்த லொயோலா திருத் தலங்களைச் சந்தித்து திருத்தொண்டாற்ற விரும்பினார். பிரான் சிஸ் கன் துறவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அவர் எருசலேமில் பணியாற்றுவது பெரும் பயனளிக்காது என்றதால் ஸ்பெயின் திரும்பினார். அதன்பின் தான் ஒரு குருவானால்தான் திருத் தொண்டாற்ற முடியும் என்று உணர்ந்தவராக தனது 32வது வயதில் பார்சிலோனா நகர் வந்து இரண்டாண்டுகள் இலத்தீன் மொழி கற்றார். அங்கலா பல்கலைக் கழகத்தில் தத்துவவியலும், 1528-1535 வரை பாரிசில் இறையியலும் கற் றுத் தேர்ந்தார். இங்கு படிக்கும்போதுதான் புனித பிரான்சிஸ் சவேரியாரை (மத் 16:26) வசனத்தின் வழியாக மனமாற்றியவர், மற்றும் போர் அருளப்பர் என்னும் ஸ்பெயின் நாட்டு பிரபு இளைஞனையும் திருத்தொண்டர்களாக மனமாற்றினார். 1537ல் இந்த இருவரும் வேறு ஆறு தோழர்களும் இணைந்து மரியன்னையின் விண்ணேற்புத் திருநாளன்று நிரந்தர ஏழ்மை, கற்பு நெறிகளைக் கடைப்பிடிப்பதாகவும் தங்களை முற்றிலும் திருத்தந்தைக்கு ஒப்புவிப்பதாகவும் வார்த்தைப்பாடு மேற்கொண்டனர்.

1537ல் இவர்கள் வெனிஸ் பயணமாகி, அங்கு தங்களை 'இயேசுவின் குழுவினர்' (The Company of Jesus) என அழைத்தனர். போர்க் காரணங்களால் கடற் பயணம் மேற்கொள்ள முடியாமல் உரோமைக்குச் சென்று திருத்தந்தை மூன்றாம் பவுலைச் சந்தித்தனர். இவர்களின் கோட்பாடுகளைக் கேட்டறிந்த திருத்தந்தை மகிழ்ந்தார். இவர்கள் "திருத்தந்தைக்கு என்றும் பணிவோம். அவரது மேலாண்மைக்கு என்றும் தலைவணங்குவோம். திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக உயிரையும் அளிப்போம்" என்றனர். இவ்வாக்குறுதிகளை ஏற்றுத் திருத்தந்தை இயேசு சபைக்கு அங்கீகாரம் வழங்கினார்.

1541இல் இயேசு சபையின் முதல் தலைவ ராக இஞ்ஞாசியாரை தேர்வு செய்தனர். 'தியானப் பயிற்சிகள்' என்ற இவரது நூலின் அடிப்படையில் சபைக்கு எழுதப்பட்ட சட் டங்கள் 1588ல் செயல்பாட்டிற்கு வந்தன. இஞ்ஞாசியார் காலத்திற்குள்ளாகவே அவர் நிறுவிய சபையினரின் எண்ணிக்கை 1000-மாக உயர்ந்தது. 1556, யூலை 31 அன்று இஞ்ஞாசியார் இறைவனடி சேர்ந்தார்.

திருத்தந்தை 5ம் பவுல் இஞ்ஞாசியாருக்கும், பிரான்சிஸ் சவேரியாருக்கும் 1609ஆம் ஆண்டு அருளாளர் பட்டம் வழங்கினார். 1622, மார்ச் 12ஆம் தேதி இவ்வருளாளர்கள் இருவரும் திருத்தந்தை 15ஆம் கிரகோரியாரால் புனிதர்க ளாக உயர்த்தப்பட்டனர். இயேசு சபையின் அடிப்ப டையான பணி உள்நாட்டில் திருச்சபையைக் காப்பதும், அயல்நாடுகளில் திருச்சபையைப் பரப்புவதும் ஆகும். இயேசு சபையினர் திரித் தெந்து சங்கத்தின் நிகழ்வில் பெரும் பங்காற்றினர் என்பது குறிப்பிடுவதற்குரியது.

ஐரோப்பிய நாடுகளில் பிரிவினைச் சபைக ளின் வளர்ச்சி, உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை தன்னை தனக்குள்ளாகவே சீர் செய்துகொள்வதும், பிரிவினைச் சபைகளால் இடை புகுந்து திருடப்பட்ட (Sheep Steeling) கத்தோலிக்க மக்களையும், மாகாணங்களையும் திருச்சபையின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர வேண்டியதும் திருச்சபையின் தலையாய பணி என உணரப்பட்டது. இப்பணியை வீர தீரத்துடன் வெற்றிகரமாகச் செய்தவர் புனித லொயோலா இஞ்ஞாசியார். இவரது பணிகள் குறித்து ஐரோப்பிய வரலாறு கூறுகையில், புனித லொயோலா இஞ்ஞாசியார் மேற்கொண்ட பணிகள் 'எதிர்மதச் சீர்திருத்த இயக்கம்' (Counter Reformation) என்றழைக்கிறது.

பிரிவினைச் சபையினரின் வளர்ச்சியில் திருத் தந்தையின் தலைமைக்கும், கத்தோலிக்க திருச் சபைக்கும் ஐரோப்பாவில் பெரும் சவால் உருவான நேரத்தில் இயேசு சபையினர் திருத்தந்தையின் தலைமைக்குத் தலைவணங்கி, அவரது கட்ட ளைகளுக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டு, ஜெர்ம னியை பெருமளவுக்குத் திருத்தந்தையின் கீழும் இங்கிலாந்தில் ஓரளவுக்கும் திருச்சபை மீண்டும் உறுதியுற உழைத்தனர் என்பது வரலாறு.

திருச்சபை பிரிவினைச் சபைகளின் மூர்க்கத் தனமான நெருக்கடிகளுக்குள்ளான காலத்தில் துறவறச் சபைகளில் மிகச் சிறந்த முறையில் பாடுபட்டது இயேசுசபை. 'தியான நூல்' என்ற இச்சபையின் நூல் கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஆன்மாக்களை மீட்கச் சிறந்த வழிமுறைகளை வகுக்கவும், கத்தோலிக்கத் திருச்சபை மேம்படவும் உதவியது. கல்விப் பணியிலும், மறைபரப்புப் பணியிலும் இச்சபையினரின் பங்கு திருச்சபைக்கு முன்னோடியாக இருந்தது. இச்சபையினரின் மறைபரப்பு விசுவாசம் பிற சபையினருக்கு வழிகாட்டியாய் இருந்தது என்பதும் வரலாற்று உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரன் தன் இளைய மகனைக் கூப்பிட்டார். மகன் ஓடிவந்து,

"என்னப்பா...?" என்று கேட்க,

"தம்பி! அப்பாவுக்கு ஐநூறு ரூபா ஒண்டு தாங்க.... சம்பளத்தில தாறன்..."

பாடசாலைக்குக் கொடுக்கும் கன்ரீன் காசில் மிச்சம் பிடிப்பதில் அன்ரனின் சின்னவன் கெட்டிக்காரன்; சேமிப்புப் பழக்கம் உள்ளவன்.

"நான் தருவன்; ஆனா, திரும்பித் தரக்குள்ள ஆயிரம் ரூபா தரணும்...."

"அட! இது என்ன அநியாயம்டா இது!"

"இல்லாட்டி நீங்க திரும்பித் தரமாட்டீங்க... இதுவரைக்கும் அறுபதாயிரத்து முந்நூறு ரூபா தரவேணும்..... இப்ப எனக்கு ஏழுவயது. எல்லா பிறந்தநாளுக்கும் சேர்ர காசெல்லாம் நீங்கதான் எடுத்தனீங்க....!

அதுதான் இவ்வளவு கணக்கும்...."

என்றான்.

அன்ரனுக்கு சிரிப்புச் சிரிப்பாய் வந்தது.

"மகனே! உங்கட பேத்டே காசெல்லாம் வங்கியில் போட்டிருக்கன்டா பொடியா..... பயங்கர வட்டியெல்லாம் போடுறீங்க.... இது என்ன சாதி "எக்கவுண்டிங்" என்றே எனக்கு விளங்கல்ல ..." என்றார் அன்ரன்.

## சிறுபிள்ளைக்கடன்



கடுகுக்கதை - 89

"சரி.... சரி... காசு தாறன்: சம்பளத்தில தந்திரனும்.... அதுமட்டுமில்ல, நீங்க பென்சனா போனா வாற தொகைக்காசு. பென்சன் எல்லாம் எனக்குத்தான் சரியா...." என்றான் சின்னப்பயல்.

இதனைக்கேட்டு அன்ரனின் மற்றைய பிள்ளைகளும், மனைவியும் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தார்கள். அன்ரன் ஒன்றும் பேசவில்லை; கடன்பட்டார் நெஞ்சமல்லவா.....!

- பற்றி -



அவ்விதமே இந்தியா வந்து சேர்ந்த முதல் மறைபணியாளர் புனித சவேரியார் இயேசு சபையின் ஆரம்ப அங்கத்தவர். இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபட்டு மறைபணியாற்றினார். அவரைத் தொடர்ந்து இயேசு சபையைச் சார்ந்த பல மறை பரப்பாளர்கள் உலகின் பல மூலைகளுக்கும் சென்றனர். அவர்கள் ஆயர்களாக, குருக்களாக, துறவற சபையினராக விளங்கினர். 1550க்குப் பிறகு போர்த்துக்கேய வணிகர்களின் உதவியுடன் ஆசிய நாடுகளில் வேத போதகப் பணிகளை முடுக்கி விட்டனர். இலங்கையிலும் இவர்களது பணிகளால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. மறைமாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

திருகோணமலை - மட்டக்களப்பு, காலி ஆகிய மறைமாவட்டங்களுக்கு இயேசு சபையைச் சேர்ந்த ஆயர்களே பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். எமது மறைமாவட்டத்தின் முதல் மூன்று ஆயர்களும் இயேசு சபையைச் சேர்ந்தவர்கள். ஆரம்பத்தில் பிரான்ஸ் நாட்டிலிருந்தும், பின்னர் அமெரிக்காவிலிருந்தும் இயேசு சபைத் துறவியர், குருக்கள் இங்கு மறைபணியாற்றினர். அவர்கள் முன்னெடுத்த கல்விப் பணி, சமூகப் பணி, மறைபரப்புப் பணி ஆகியவற்றின் அழியாத தடங்கள் இன்றும் சான்று பகர்ந்துகொண்டிருப்பதை நாம் அறிவோம். இம் மண்ணிலேயே புதைக்கப்பட வேண்டும் என பேராவலுடன் வாழ்ந்தவர்களின் வரலாறு உயிர்ப்பின் கனிகளாகப் பலன் கொடுப்பதற்கு நாம் சாட்சிகள். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர் சீவரத்தினத்தாருக்கு, ஊருக்குப் போனால் திரும்பி அலுவலகம் வருவதற்கு இலேசில் மனம் வருவதில்லை.

“ஏன் மோனே, இப்பிடி நெடுகிலும் நின்டால் நிற்பாட்ட மாட்டான்களா?”

அம்மாவின் ஆதங்கம் அவருக்குப் புரிந்தாலும், ஊரிலுள்ள உறவுகளை – நண்பர்களை – மச்சாள் திரவியத்தை அவரால் மறந்திருக்க முடிவதில்லை. அவளைத்தான் கட்டிக்கொடுப்பதென்றாலும், திருமண




மும் தள்ளிக்கொண்டே போவதில் மனிதருக்கு மனவருத்தம் அதிகம்.

“என்னம்மா விசர்க்கதை கதைக்கிறியள்? இப்ப எட்டு வருஷமாய் வெளி மாவட்டத்திலேயே வேலை செய்யிறன். அப்பாவுமில்லை. உங்களுக்கும் முடியேல்ல. தோட்டந் துரவுகளை யார் பார்க்கிறது? நாலு வருஷமாய் நானும் இடமாற்றம் கேட்டபடிதான். அவைக்கு விளங்கிறதாயில்லை....” என்று ஒரு போடு போட்டார்.

ஆறு நாள் விடுமுறையெடுத்துக் கிளம்பியவர், ஆறேழு மாதங்களின் பின் சாவகாசமாய் வந்து சேர்ந்தார், அத்தி பூத்தது போல்.

விரலடையாளம் மூலம் நேரம் கணிக்கும் ‘பஞ்ச்’ மெஷின் பரவலாக வந்து சேராத காலகட்டம் அது. வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை போன்ற பெரிய நிறுவனங்களில் மட்டுமே அது அறிமுகமாயிருந்தது. ஒரு விதத்தில் அதுவும் அவருக்கு வசதியாய்ப் போய்விட்டது.

நண்பர்களுடன் அரட்டையடித்துக்கொண்டே வரவுப் பதிவேட்டின் தாள்களைப் புரட்டிக் கையெழுத்திடுவதிலேயே குறியாயிருந்தார். அந்த வேலை பூர்த்தியானதும் தனது தொப்பை வயிறைத் தடவிக் கொண்டே எழுந்து அன்றைய பத்திரிகையைப் புரட்டினார். தூரத்தே பொஸ்ஸின் தலைக் கறுப்பைக் கண்டதும் பவ்வியமாக எழுந்து, அவர் படியேறும் வரை காத்திருந்து ‘குட்மோர்னிங்’ சொன்னார். தான் கவனித்ததாகப் பக்கவாட்டில் தலையசைத்துக்கொண்டே ‘கவனிக்கிறன்’ என்ற பாவனையில் தனது இருக்கையில் அமர்ந்ததும் அழைப்பு மணியை அழுத்தினார் அவர். ஆவணப் பாதுகாப்பறையில் நின்ற சிற்றூழியர் தவராசா, அவரது கோரிக்கையை உணர்ந்து கொண்டவனாய் வரவுப் பதிவேட்டை எடுத்துக்கொண்டு உள் நுழைந்தான். அதற்குள் சீவரத்தினத்தார் தன்னோடு ஒரே அறையில் பணிபுரியும் ஆனந்தகுமாரிடம் காதுக்குள் குசுகுசுப்பது போல் தோன்றினாலும், அவரையும் மீறி அவர் குரல் வெளியே கசியவே செய்தது.

“மச்சான், உமக்கு மட்டும்தான் சொல்லிறன்.... வேறை ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதையும்.... எனக்கும் அவவுக்கும் கலியாணம் முற்றாச்சுது. அடுத்த முறை வரும்போது மனிசியுடன்தான் வருவன் .... கலியாணம் பிக்ஸாகி கார்ட் அடிக்கும் வரை யாருக்கும் மூச்சுவிடாதையும்”.

நம்பும்படியாக ஒரு பொய்யை அவிழ்த்துவிட்டதில் அவரால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. தானே சொல்லி கெக்கட்டமிட்டுச் சிரித்தார். அதிகாரி உள்ளே இருப்பதை அதற்குள் மறந்தவராய் அப்படி நடந்துகொண்டார்.

மறுபடியும் அழைப்பு மணி அதிர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றூழியர் புஸ்பராசா வந்து அழைத்தான்.

"பொஸ் வரட்டாம்"

முகம் பார்த்துச் சொன்னதில் வாயெல்லாம் பல்லாக வந்து நின்ற சீவரத்தினத்தாரிடம்,

"உம்முடைய வேலையைச் செய்து முடிக்க இன்னும் ஆரும் இருக்கினமோ....? மெடிக்கல் றிப்போர்ட் கொண்டு வந்தனீரா?"

பொஸ்ஸின் கேள்வி நெற்றிப் பொட்டில் அறை விழுந்தமாதிரி அவதிப்பட்டார். இவரெங்கை அற்றென் டன்ஸைப் பார்த்திருப்பாரோ என்று பயந்து போனன். நல்லவேளை...." என மனதுள் நினைத்தவராய்,

"டொக்ரர் ஒரு கிழமை லீவிலை நிற்கிறாராம். அடுத்த முறை வரயுக்கை கொண்டுவாறன் ஸேர்"

அதிகாரி அற்றென்டன்ஸைத் தூக்கி அவர்முன் தள்ளிவிட்டார்.

அதிர்ந்து போனார் மனிதர்.

"அப்ப இதுக்கென்ன சொல்லுறீர்?"

இவர் மௌனமாய்த் துவள்வதைப் பார்த்து புஸ்பராசா சிரித்துக்கொண்டான். அலுவலகமெங்கும் அந்த நியூசைப் பரப்ப ஆவலாதியாக அகன்று போனான்.

மிகுதி அடுத்த இதழில் .....



குறள் 18:

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.**

**விளக்கம்**

**வானம் வறண்டு மை இல்லாது போனால், இவ்வுலகில் வானோர்க்கு எடுக்கும் திருவிழாவும், நாள்தோறும் செய்யும் பூசையும் நடக்காது.**

# இக்கணத்தில் வாழ்!



இரு ஜென் துறவிகள் ஆற்றைக் கடக்கையில் அவர்களிடம் ஒரு பெண் ஆற்றைக் கடக்க உதவி கேட்கிறாள். அதிக வெள்ளம் காரணமாகத் தன்னால் நடக்க முடியவில்லையென்றும், எனவே, தன்னை மறுகரைக்குத் தூக்கிச் செல்லு மாறும் வேண்டினாள். முதல் துறவி அவ்வாறே அவளுக்கு உதவி செய்தார். பின்னர் அவர்களிருவரும் தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

சில மணிநேரம் கடந்தபின் இரண்டாம் துறவி, முதல் துறவியிடம் "ஒரு துறவி யான நீர் ஒரு பெண்ணை எப்படித் தூக்கி வரலாம்?" என வினவ, முதல் துறவி புன்சிரிப்புடன் "நான் அவளை ஆற்றின் கரையிலேயே விட்டுவிட்டேன். ஆனால் நீர் அவளை இன்ன மும் சுமந்து வருகிறீரே" என்றார். இது எல்லோருக்கும் தெரிந்த கதைதான்.

ஆனால், இதன் நீதியான, "நிகழ்காலத்தில் மட்டும் நிலவுங்கள்" என்பது மட்டும் நினைவில் நிற்ப தில்லை. நம் வாழ்வின் பெரும் பகுதி கடந்த காலத்தின் குறைகளையும், எதிர்காலத்தின் எதிர்பார்ப்பு களையும் சிந்திப்பதிலேயே கழிந்து விடுகிறது. எனவே, நிகழ்காலத்தின் அருமையறிந்து அந்தந்தத் தருணங்களை வாழவேண்டும். எப்போதோ, ஏதோ ஒரு நாள் நம் நண்பர் காயப்படுத்தியிருப்பார் அல் லது அவரால் நமக்கு ஒரு அவமானம் ஏற்பட்டிருக்கும். நாம் அதை மறக்காமல் திரும்பித் திருப்பி அசை போட்டு, அந்த நண்பர் மீது காழ்ப்புணர்ச்சியும், வெறுப்பும் ஏற்பட்டுவிடும். நமக்குப் பிடிக்காத படத்தின் சி.டி.யை நம்மில் யாரேனும் திரும்பத் திரும்பப் போட்டுப் பார்ப்போமா? நிச்சயமாக இல்லை. மூன்று மணி நேரம் பார்க்கும் சினிமாவிலேயே நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துபவற்றைத்தானே தேர்ந்தெடுக்கி றோம். பின்னர் ஏன் நம் மனதில் காயப்படுத்திய நிகழ்வுகளை மறுபடி மறுபடி நினைத்துப் பார்த்து நம் காயங்களை நாமே ஆழமாக்கிக் கொள்ள வேண்டும்?

- விகடன் 2014 (இணையம்) -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனின் சில நிமிடங்கள்...



தொண்டனின் சில நிமிடங்கட்காக இம்முறை நாம் ஆறுமுகம் வசந்தகுமார் அவர்களைச் சந்திக்கின்றோம். வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி இன்று பிரதானமான புகையிரத நிலையங்களில் ஒன்றான மட்டக்களப்பு புகையிரத நிலையத்தின் பிரதம புகையிரத நிலைய அதிபராகப் பணி புரிகின்றார். இவரது கடமை மனப்பாங்கு, எளிமையான - அன்பான நடத்தைகள் என்பன இவரை செவ்வி காணவேண்டும் என்ற மனநிலையை என்னிடம் உண்டாக்கின. ஓர் இரவுப் பொழுதிலே, நகர்சேர் பாடுமீன் கடுகதிப் புகையிரதம் புறப்பட்டுச் சென்றபின் இரவு பத்து மணிவரை ஆறுதலான மனநிலையுடன் அவர் எம்முடன் உரையாடினார்.

**■ வணக்கம்! வசந்தகுமார் ஐயா அவர்களே உங்களுடைய ஆரம்பகாலம் பற்றியும், தொழில் வாழ்க்கை பற்றியும் சிறிது சொல்லுங்களேன்...**

● நான் 1959ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதியன்று பிறந்தேன். என்னுடைய பூர்வீக கிராமம் வாழைச்சேனை யாகும். நான் என்னுடைய பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் 1982ம் ஆண்டில் கொலன்னாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் கடமை புரிந்தேன். உரப் பைகள் தயாரிக்கும் பகுதியிலேயே பணியாற்ற வேண்டியிருந்தது. பெற்றோலியக் கழிவுகளிலிருந்தே உரப்பைகள் தயாரிக்கப்பட்டன. அப்பணிப் பகுதி உடல்நலத்திற்குப் பொருத்தமானதாகக் காணப்பட வில்லை. அக்கால கட்டத்தில் பாராளுமன்ற உறுப் பினர்கள் மூலம் 'வேலை வங்கிப் படிவங்கள்' வழங்கப் பட்டன. அதை நிரப்பிக் கொடுத்ததன் மூலம் எனக்குப் புகையிரதத் திணைக்களத்தில் பணி செய்யும் வாய்ப்புண்டாயிற்று. என்னுடைய பிறப்புச் சான்றிதழில் 'வசந்த குமார்' என்பதற்குப் பதிலாக 'வசந்தகுமார' என்று எழுதப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சையின் போது 'உங்களுக்குத் தமிழ் தெரியுமா....?' என்று கேட்டார்கள். என் பெயர் குழப்பம் தொடர்பாக என எனக்கு விளங்கிவிட்டது. 'ஆம்' என்று சொன்னேன். அங்கிருந்த தமிழ் ஒரேயொரு அதிகாரி என்னிடம் 'குமுதம்' சஞ்சிகை ஒன்றைத் தந்து வாசிக்கச் சொன்னார்; வாசித்தேன். 2ந் தரப் புகையிரத நிலைய அதிபராக 1983ம் யூன் மாதம் 21ம் திகதி எனக்கு நியமனம் கிடைத்தது. கிழக்கு மாகாணத்திற்குக் கிடைத்த ஒரேயொரு நியமனம் இது மட்டுமே. மூன்று மாதங்களின் பின் பெயர் மாற்றம் சரி செய்யப்பட்டது.

**■ உங்கள் பணிக்காலத்தில் நடைபெற்ற மறக்கமுடியாத சம்பவங்கள் பற்றி ஏதும் கூற முடியுமா....?**

● ஆம்! நான் 1983ம் ஆண்டு யூன் மாதம் நியமனம் பெற்றேன். அடுத்த மாதமே ஆடிக் கலவரம் ஆரம்ப மானது. நான் 'கவுண்டரில்' இருந்து சீட்டுக்கள் விநியோகித்துக் கொண்டிருந்தபோது என் கண்முன்னே, புகையிரத மேடைகளில் இருந்த தமிழர்களை வெட்டி வீழ்த்தினார்கள். எங்கும் இரத்த ஆறு; கண்ணெதிரே அஜந்தா ஹொட்டல் எரிந்தது. என்னையும், ஏனைய தமிழ் அதிகாரிகளையும் எங்களுடன் பணிபுரிந்த சிங்கள அதிகாரிகள் கோட்டைப் புகையிரத நிலையத்தின் மேல்மாடியில் சுமார் ஒரு மாத காலமாக வைத்திருந்து காப்பாற்றினார்கள். இதேபோன்று 1990ம் ஆண்டு மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தின் விடுதியில் குடும்பமாக இருந்தபோது நகருக்குள் படையினர் உள் நுழைந்த போதும் போதும் பெரும் அனர்த்தத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டேன்.

**■ வேறு சேவை நிலையங்களில் நீங்கள் பணி யாற்றவில்லையா....?**

● மருதானை ரெயில்வே செட், சீனன்குடா போன்ற இடங் களிலும் பணியாற்றினேன். சுமார் 15 வருடங்களாக முதலாந்தர புகையிரத நிலைய அதிபராகப் பணியாற்று கின்றேன்.

**■ புகையிரத ஆசன ஒதுக்கீடுகளில் தொடர்பாகப்**

- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செவ்வாயில் பறக்கப்போகும் ஹெலிகாப்டர்!



மீண்டும் செவ்வாய் மீது கவனம் செலுத்தவிருக்கிறது அமெரிக்காவின் விண்வெளி அமைப்பான "நாசா". ஏற்கனவே அனுப்பியதைப் போல ஊர்தியை அனுப்பாமல், 2020 செவ்வாய் திட்டத்திற்கு, ஹெலிகாப்டர் ஒன்றை நாசா அனுப்பப் போகிறது. "மார்ஸ்காப்டர்" எனச் செல்லமாக அழைக்கப்படும் இது, தானோட்டி வாகனம்.

மார்ஸ் காப்டர் செவ்வாயில் இறங்கியதும் எப்படிப் பறக்கும், என்ன மாதிரியான படங்களை எடுத்து அனுப்பும் என்பதை விளக்கும் ஒரு கற்பனை காணொலியையும் நாசா அண்மையில் வெளியிட்டுள்ளது. விண்கலன்களிலிருந்தும், செவ்வாயின் தரைப் பகுதியிலிருந்தும் ஏகப்பட்ட படங்களை நாசா எடுத்துள்ளது. என்றாலும் பறவைப் பார்வையில் செவ்வாயின் மேற்பரப்புகளைப் படம்பிடித்து ஆராய்வதன் மூலம், அக்கிரகத்தைப் பற்றி நமக்கு புதுவிதமான தகவல்கள் கிடைக்கும் என, நாசா நம்புகிறது.

நன்றி: தினமலர்

பல குற்றச்சாட்டுகள் உள்ளனவே.... இது பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

- முறையாகத்தான் எல்லாம் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. 3ம் வகுப்பு உறங்கவிருக்கையில் உள்ள 56 ஆசனங்களில் 14 ஆசனங்களும், 2ம் வகுப்பு உறங்கவிருக்கையில் உள்ள 48 ஆசனங்களில் 14 ஆசனங்களும், குளிரூட்டப்பட்ட புகையிரதப் பெட்டியின் 32 ஆசனங்களில் 12 ஆசனங்களும், முதலாம் வகுப்புப் படுக்கைகள் 14ல் 8 படுக்கைகள் மட்டுமே மட்டக்களப்புப் புகையிரத நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனையவை வேறு புகையிரத நிலையங்கட்குப் பகிரப்பட்டுள்ளன. எமக்கு ஒதுக்கப்பட்டவைகளை மட்டுமே எம்மால் வழங்க முடியும். கடைசி நேரத்தில் வேறு புகையிரத நிலையங்களால் வழங்கப்படாது ஏதேனும் ஆசனங்கள் எஞ்சியிருந்தால் சம்பந்தப்பட்ட நிலையங்களுடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொடுக்கின்றோம். இதுவும் அபூர்வமாகத்தான் சாத்தியம். இது தவிர தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களாலும், புகையிரத சீட்டுகள் வழங்கப்படுகின்றன. அவர்களும் தங்களது 'கொமிஷன்' கட்டணத்துடன் சேர்த்துச் சீட்டுகளை விநியோகம் செய்கின்றார்கள். இதுதான் உண்மை.


■ நீங்கள் இப்பொறுப்பை ஏற்கு முன்னர் "கணக்குகள் தொடர்பான" நிலைய அதிபராகப் பணியாற்றி உள்ளீர்கள். அது தொடர்பாக....

- புகையிரத நிலையங்களில் சேரும் வருமானங்கள் உள்ளூர் வங்கிகளில் வைப்புச் செய்யப்படுவதில்லை. அவை புகையிரதம் ஊடாகத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். சேரும் பணத்தாள்களின் இலக்கங்கள் எல்லாம் பதியப்பட்டு அவையும் பணத்துடன், புகையிரதத்தில் வரும் பெரிய, பாரமான, பாதுகாப்பான இரும்புப் பெட்டியில் இடப்பட்டுந்தான் அனுப்பப்படுகின்றன.

■ புகையிரதத்தில் யாரும் மோதி மரணிக்கும் போது என்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

- புகையிரதத்திற்குப் பொறுப்பான தலைமைக் காவலரின் பொறுப்பில் உடல் கொண்டுவரப்பட்டு அடுத்த புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்படும். நான் சீனன்குடாவில் கடமையாற்றும்போது - மிகவும் யுத்தகாலம் - இடம்பெற்ற விபத்தில் இறந்த சிதறிய உடலொன்றை மேடையில் வைத்து, நாய்களில் இருந்து காப்பாற்ற காவல் காத்த அனுபவமும் உண்டு.

தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றேன்.




"அந்த ஆஸ்பத்திரியில எல்லா வியாதிக்கும், பிரியாத்தான் சிகிச்சை அளிப்பாங்கன்னு சொன்னதைக் கேட்டு, பணம் எடுத்துட்டு போகாம போனது தப்பா போச்சுது...."

"ஏன் என்னாச்சு?"

"ஆஸ்பத்திரி டாக்டரம்மாவோட பேர்தான் 'பிரியா' வாம்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்லி சாப்ளின்



உலகையே சிரிக்கவைத்தவர் சார்லி சாப்ளின். ஆனால், அவரது வாழ்க்கை சந்தோஷமாக இருந்ததே இல்லை. பிறந்ததில் இருந்தே துன்பங்கள், அவமானங்கள், தோல்விகள்...!

1889.... இலண்டன் நகரில் சாப்ளின் பிறந்து, ஓரிரு வருடங்களிலேயே பெற்றோரிடையே சண்டை வந்து விவாகரத்து ஆகி விடவே, பேசத் தொடங்கும் முன்பே, தாயுடன் சேர்ந்து மேடையில் பாடவேண்டிய நிர்ப்பந்தம். ஐந்து வயதுச் சிறுவனின் பாட்டுக்குக் கிடைத்த அமோக வரவேற்பு, ஏழு வயதிலேயே பறிபோனது. காரணம், அவரது தாயாரின் மனநிலை பாதிக்கப்பட்டதுதான்.

குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக, சலூன், கண்ணாடித் தொழிற்சாலை, மருத்துவமனை என எங்கெங்கோ வேலை பார்த்தவர், சில காலம் தந்தையுடன் சேர்ந்து மேடை நாடகங்களிலும் நடித்தார். ஆனால், தந்தை திடீரென இறந்து விடவே, மீண்டும் தொய்வு!

1910.... நாடகக் குழுவினருடன் அமெரிக்கா போனவருக்கு குறும்படங்களில் நல்ல பெயர் கிடைத்தது. அவரது முத்திரை கதாபாத்திரமான 'டிராம்ப்' (பகி பாண்ட், தொப்பி, கைத்தடி, வளைந்த கால்கள்) பிரசித்தி பெற்றது. 'த கிட்', படத்தில் தொடங்கிய வரவேற்பு', 'த கிரேட் டிக்டேட்டர்' வரை நீடித்தது. ஆனால் இந்தக் காலகட்டங்களில் குடும்ப வாழ்வு அவரைப் பாடாய்ப்படுத்தியது.

1981ல் நடந்த முதல் திருமணம், இரண்டு வருடம் மட்டுமே நீடித்தது. அதற்குப்பின் நடந்த இரண்டு திருமணங்களும்கூட சாப்ளினுக்குச் சோகத்தை மட்டுமே கொடுத்தன. 1942ல் நான்காவது மனைவியாக ஓ.நெய்ல் அமைந்த பின் இல்லறத் தொல்லைகள் நின்றன.

1945ம் ஆண்டு, சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் தீவிர வாதி என அமெரிக்க அரசு குற்றம் சாட்டியது. இரண்டாவது மனைவி ஜோன்பெர்ரியும் சாப்ளின் மீது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்திருந்தார். அவர் தரப்பு நியாயங்களை அமெரிக்க அரசு கேட்காததால், வேறுவழியின்றி, 1952ல் கனத்த இதயத்துடன் சுவிட்சர்லாந்தில் அடைக்கலமானார் சாப்ளின்.

## ஆன்றோர் மொழிகள்!

"தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும்தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும்" – **கன்ஃப்யூஷியஸ்**

"வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு வழி: அடுத்தவர்களின் வெற்றியை உங்களுடைய வெற்றியைப் போலக் கொண்டாட கற்றுக்கொள்ளுங்கள்" – **அப்துல் கலாம்**

"அரசன், ஆசிரியன், நண்பன், புத்திசாலி, மடையன் இவர்களோடு தர்க்கம் செய்யாதே" – **சாணக்கியன்**

"எந்தப் பொய்யும் வயோதிகம் அடையும் வரை வாழ்வதில்லை" – **ஸோபோகிளிஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

க.பொ.த உயர்தரம்

- நில்மினி கஜேந்திரன் -

**திருவழிபாடு:**

2ம் வத்திக்கான் சங்கத்திலே வெளியிடப்பட்ட 16 கொள்கைத் திரட்டுக்களில் முதலாவதாய் வெளிவந்தது "திருவழிபாடு" பற்றிய கொள்கை விளக்கமாகும். இதில் சங்கத்தின் திருவழிபாடு பற்றிய விளக்கங்கள், படிப்பினைகள் பற்றிய விடயங்கள் மிகத் தெளிவாய்த் தரப்பட்டிருந்தன. இவ்வழிபாட்டின் மையமாக குறிப்பாக இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்ற விடயங்கள் உள்ளன.

இத்திருவழிபாடானது பாஸ்கா மறைபொருளைச் செயலாக்கி இதில் நம்மைப் பங்கெடுக்க வைத்து, நம் வாழ்வில் செயலாக்கிக் கடைப்பிடிக்கச் செய்கிறது. இப்பாஸ்கா மறைபொருளே திருச் சபையின் தொடக்கமும், அடிப்படையும் குறிக்கோளுமாகும். கிறிஸ்து என்றுமே திருச்சபையுடன் இருக்கிறார். இதனாலேயே திருவழிபாடு திருச்சபையின் ஊற்றும், உச்சமுமாயுள்ளது. மக்களை இறைவன்பாலும், இறைவனை மனிதன்பாலும் கொண்டு செல்வதே திருச்சபையின் பணியாகும். திருவழிபாடானது இந்த இறை மனித உறவை வெளிப்படுத்துகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாடு பற்றிய ஏட்டிலே திருச்சபை பற்றிய ஒரு புதிய புரிதலைக் காண்கிறோம். திருச்சபையை ஒரு படிநிலை அமைப்பாகப் பார்க்காமல், அதை ஒரு இறை மக்கள் சமூகம் எனும் அடிப்படையில் அணுகுகிறது. திருமுழுக்கு வழியாய் அனைத்துக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கெடுக்கிறார்கள். எனவே, கிறிஸ்தவர்களனைவரும் குருக்களென்ற முறையில் திருவழிபாட்டிலே அனைவரும் அர்த்தமுள்ள முறையில் செயலூக்கமுள்ள முறையில் பங்கெடுக்க வேண்டும்.

இத்திருவழிபாடு பற்றிய விளக்கத்தைச் செயற்படுத்த உலகளாவிய முறையில் ஆணைக்குழு ஒன்று 1964.01.01 இல் நியமிக்கப்பட்டது. இதனடிப்படையில் ஒவ்வொரு ஆயர் மன்றத்திலும், தொடர்ந்து ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் திருவழிபாட்டு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. பல கருத்தரங்குகள், செயலரங்குகள் நடத்தப்பட்டன. திருவழிபாட்டின் இயல்பு, தன்மை, அர்த்தம், நோக்கம், இறையியல், எவ்வாறு அதில் பங்கெடுப்பது, எவ்வாறு விசுவாசிகள் பங்கேற்பது, வழிபாடுகளை, திருச்சடங்குகளை, இசையை எவ்வாறு நம் பண்பாட்டுக் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாற்றி அமைப்பது என்பது பற்றிய விழிப்புணர்ச்சி மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது.

எனவே, நாம் காணும் புதிய மாற்றம் விசுவாசிகள் முழுமையாகப் பங்கேற்பதாகும். இதனால் முன்னர் இருந்ததுபோல் விசுவாசிகள் வெறும் பார்வையாளராய் இராமல் பங்காளிகளாகிச் செயலூக்கத்துடன் செயற்படுகின்றனர். இதனால் திருப்பலியின் மையக் கருத்து யாது? என்ன வாசகம்? முன்னுரை, மன்றாட்டுக்கள் போன்றவை முன்னாயத்தம் செய்யப்பட்டுச் செயலூக்கமுள்ள வழிபாடாய் விளங்குகிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர் நற்கருணை ஒரு பலியென்பதை ஏற்றுக்கொள்ள மறுத்த புரட்டஸ்தாந்தருக்கு எதிராக நற்கருணை பலியே என்பதை வலியுறுத்திக் குரு பீடத்தைப் பார்த்து நற்கருணைப் பலி ஒப்புக்கொடுத்தார். மக்களும் அவருக்குப் பின்னாலே பீடத்தைப் பார்த்த வண்ணம் இருந்தனர். ஆனால், இப்போது குரு மக்கள் பக்கம் திரும்பி இறைமக்களுடன் இணைந்து பலி ஒப்புக்கொடுக்கிறார். மேலும், நற்கருணை பலி மட்டுமல்ல அது ஒரு விருந்தும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. இவ்வளவு காலமும் கத்தோலிக்கத் திருச்சபையில் திருவழிபாட்டு மொழி இலத்தீனாக இருந்தது. வத்திக்கான் சங்கமானது மக்கள் சுதேச மொழிகளில் வழிபட அனுமதி வழங்கியது. இவ்வளவு காலமாய் ஆலயங்கள் கட்டும் முறை உரோமைய அல்லது கொதிக், ஐரோப்பிய கட்டிடக் கலை முறையாய் இருந்தது. தற்போது, உள்நாட்டுக் கட்டிடக் கலைக்கு அமைய ஆலயங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. சடங்குகளும் பிரேத அடக்கம், திருமணம் போன்றவையும் நம் நாட்டு முறைகளுக்கு மாற்றம் பெற்றன. இவையனைத்தும் 2ம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் திருவழிபாட்டில் ஏற்பட்டவையாகும். பண்பாட்டு மயமாக்கலின் படிப்பினை பற்றிய அனைத்தும் திருவழிபாட்டுக் கொள்ளையினுள் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 04

1) திருப்பாடல்கள் 118:24 ஐ எழுதுக?

.................................................................................................................

2) "திருச்சிலுவைவையை நோக்குகின்றபோது நஞ்சான நமது இதயங்கள் குணமாகின் றன" எனக் கூறியவர் யார்?

.................................................................................................................

3) "நீர் ஏந்தும் பிரதேசங்கள்" என்று இலங்கை வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பிரதேசங் கள் எவை?

.................................................................................................................

4) தமிழ் விக்கிபீடியா எப்போது உருவாக்கப்பட்டது?

.................................................................................................................

5) ஜெர்மனிய அரசாங்கம் தபால் முத்திரையை வெளியிட்ட நமது தமிழ்ப் பெரியார் யார்?

.................................................................................................................

6) 2018ம் வருடத்துக்கான நோபல் அமைதி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஈராக்கின் முதுபெரும் தந்தையின் பெயர் யாது?

.................................................................................................................

7) 1956ல் பாராளுமன்னறத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றபோது தலைமை வகித்தவர் யார்?

.................................................................................................................

8) "அவனியில் அமைதி" எனும் சுற்றுமடல் எப்போது? யாரால் வெளியிடப்பட்டது?

.................................................................................................................

9) 1962ம் வருடம் ஒக்டோபர் 16 முதல் 28 வரையிலான நாட்களில் முடிவுக்கு வந்த நெருக்கடி எது?

.................................................................................................................

10) அறிவியலாளர் ஹாக்கிங் கருந்துளைகள் கதிரியக்கத்தை வெளிவிடுகின்றன என்ற புகழ்பெற்ற கண்டுபிடிப்பை வெளியிட்ட வருடம் எது?

.................................................................................................................

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

வினாவிடைப் போட்டி - 04
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

### கையாள்பவர்களின் திறமை :

அந்த மனிதர் ஆதிவாசி. முதல் முறையாக நகரத்திற்கு வந்திருந்தார். இயற்கையின் ஓசைகளுக்கே பழகிய அவருடைய காதுகளில் கொடூரமாக ஒலித்தது ஓர் ஓசை. அதிர்ந்து போய்ப் பார்த்தார். ஒரு சிறுவன் புல்லாங்குழலை ஊத முயன்று கொண்டிருந்தான். அவர் இதற்குமுன் புல்லாங்குழலைப் பார்த்ததில்லை. அச்சத்துடன் நகர்ந்தார். ஓரிரு நாட்களின் பின் ஓர் அரங்கம் வழியே சென்றபோது இனிமையான இசை அவர் செவிகளில் புகுந்தது. உள்ளே பார்த்தால் ஒரு புல்லாங்குழல் கலைஞர் வாசித்துக்கொண்டிருந்தார். வாழ்க்கை புல்லாங்குழல் போலத்தான். கையாள்பவர்களின் திறமைக்கேற்ப அது இன்னிசையாகவோ, இம்சையாகவோ மாறுகிறது.

### பிறவியின் பயன் ....

கொடியில் அசைந்த மலருக்குக் கர்வம் தாங்கவில்லை. தன்னை முத்தமிட வந்த காற்றைக் கண்டு முகந்திருப்பிக் கொண்டது. அதிர்ந்து வீசிய காற்று மலரைக் கொடியிலிருந்து உதிர்த்தது. கீழே விழுந்த மலர் கதறியது. காற்று மலரைத் தரையில் இழுத்தது. மலர் அழுதது. திடீரென்று முரட்டுக் கரமொன்று தன்னைப் பற்றித் தூக்குவதை உணர்ந்தது. ஆஜானுபாகுவான மனிதர் தன்னைத் தூக்கிச் செல்வதை உணர்ந்து கண்களை இறுக மூடிக்கொண்டது. மீண்டும் கீழே விழுந்தது தெரிந்து விழித்துப் பார்த்தால் ஆலயமொன்றில் ஆண்டவனின் அழகிய மலர்ப் பாதங்களில் அர்ச்சனைப் பூவாய் விழுந்தது தெரிந்தது. தனது கர்வம், வெறுப்பு, அச்சம் அனைத்தும் கரைந்து தன் பிறவியின் பயனை உணர்ந்தது மலர். எல்லாத் திறமைகளும் ஆண்டவனுக்கு அர்ப்பணமாகும்போதுதான் அர்த்தம் பெறுகின்றன.

- ஜே.எச்.இரத்தினராஜா -

# ஆசுகவி வேலுப்பிள்ளை




"அச்சமென்பதிருப்பினும் இல்லாமை சொல்லேன், அதிகநிதி வழங்கினும் இல்லாமை சொல்லேன். பஷத்துக்காயும் நானிலாமை சொல்லேன், பரிகசிப்பவரைத் துணிந்து பரிகசிப்பேன்" என்று தலை நிமிர்ந்து இறுமாப்போடு பாடுங் கவிஞர் யார் தெரியுமா? கல்லடி வேலுப்பிள்ளை என்று பிரசித்திபெற்ற வயாவிளான், ஆசுகவி வேலுப் பிள்ளையாவார். வலிந்து கேட்போரைத் தாக்கும்படி நகைச்சுவை யுடன் விடைகூறுவதிலும், அப்படியான பாடல்களைப் பாடுவதிலும் அவருக்கு நிகர் அவரே. அவரைப் பற்றிய கதைகள் கிளைவிட்டுப் பரந்து, கற்பனைகளோடு சேர்த்துக் கிராமங் கிராமமாகப் பலபடி பேசப்படுகின்றன. "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்ற இலட் சியத்தைக் கடைப்பிடித்துச், "சுதேச நாட்டியம்" என்ற பத்திரிகையை நடாத்தி எதிரிகளைக் கதி-கலங்க அடித்தார் அவர். அவரது "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" மிகப் பிரசித்தமான நூலாகும். பிற்காலத்தில, "உன் சித்தாந்தமென்ன", "கதிரை வேலவர் பதிகம்" என அவர் பாடியுள்ள பாக் கள் மனதை உருக்கக்கூடியன. நகைச்சுவை செறிந்த அவரது வாழ்க்கையை எடுத்துக் காட்டும் அரிய வரலாறும், இனிய பாக்களின் தொகுதியும் இப்போது எழுதப்படாவிட்டால் பிற்சந்ததியார் அவரை எப்படி நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள்? அவரைப்பற்றி நீங்கள் நினைவில் வைத்திருக்க இதோ ஒரு பாடல்.

"தீவிரவி வேகவிடை செப்பவிரண் டர்த்தமொழி
கூற வெதிரிகணா வைக்குறுக்க - மேவிடிபோற்
கண்டனங்கீ றக்கல் லடியானைப் போலொருவ
ருண்டெனறெவருமுரை யார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## உலகின் முதல் அம்புலன்ஸ் உருவான வரலாறு தெரியுமா..?

நெப்போலியன் படைப்பிரிவில் பணியாற்றிய தலைமை டாக்டர் டொமினிக் ஜின்லாரேதான் அம்புலன்ஸ் என்ற வார்த்தையைக் கண்டுபிடித்தார், பயன்படுத்தினார். இது பிரெஞ்சு வார்த்தை, 'ஹொஸ்பிட்டல் அம்புலன்ஸ்' என்னும் வார்த்தைக்கு 'நகரும் மருத்துவமனை' என்பது பொருள். முதல் அம்புலன்ஸ் வண்டி 200 வருடங்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. முதலில் குதிரை பூட்டிய வண்டியில் இருந்த அம்புலன்ஸ் இரயில்கள், கப்பல்கள், விமானங்கள் என விரிவடைந்தது. அம்புலன்ஸில் நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும்போது, பலர் இறக்க நேரிட்டதால் அம்புலன்ஸிலேயே ஒக்சிஜன், ஸ்ட்ரெச்சர், மருந்துகள் ஆகிய முக்கியமானவை கொண்ட குட்டி மருத்துவமனை போல் ஆக்கப்பட்டது. மோட்டார் வாகனங்களில் அமைக்கப்பட்ட உலகின் முதல் அம்புலன்ஸ் நியூயோர்க் நகரில் உள்ள பெவில்யூ மருத்துவமனையில் 1869 ஆம் ஆண்டில் மக்களுக்காக பயன்படுத்தப்பட்டது. உலகின் முதல் ஹெலி காப்டர் அம்புலன்ஸ் இரண்டாம் உலகப் போரில் செயல்பட்டது. 1970க்குப் பிறகு அம்புலன்ஸிற்காகவே பயிற்சி அளிக்கப்பட்ட மருத்துவர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் அமர்த்தப்பட்டனர். ஆபத்தில் உள்ள நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அம்புலன்ஸிலேயே அளிக்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய அம்புலன்ஸ் வாகனம் பிரிட்டனில் உள்ளது. 59அடி நீளமுள்ள 44 படுக்கை வசதி கொண்ட அம்புலன்ஸ் அமெரிக்காவில் உள்ளது. 'தாதியர்' என்றால் 'மருந்து, உணவு முதலியவற்றை அன்புடன் ஊட்டி நம்மை உற்சாகப் படுத்துபவர்' என்று பொருள். கிரேக்க, உரோமானியர்கள் காயங்களுக்கு மருந்து கட்டுவதற்காக மட்டும் இத்தகைய பெண்கள் இருந்தனர். உரோமானியர்கள் ஆண் தாதியர்களை தங்கள் இராணுவத்தில் சேர்த்தனர். அவர்கள் அடிபட்ட வீரர்களுக்கு மருந்து வைத்துத் தாமே கட்டிவிட்டனர்.

## டாக்டருக்கு தண்டனை!



பழங்காலத்தில் பாபிலோனியாவில் அறுவைச் சிகிச்சையின் போது ஒரு நோயாளி இறந்து விட்டால் அறுவை சிகிச்சை செய்த டாக்டரின் வலது கையைத் துண்டித்து விடுவார்கள். பாரசீகத்தில் அறுவை சிகிச்சையில் மும்முறை தொடர்ந்து தோல்வி கண்டால் அந்த மருத்துவர் அந்த நாட்டில் வைத்தியமே செய்யக்கூடாது என்ற சட்டம் இருந்தது.

## முதல் மருத்துவ உடை!

அறுவை சிகிச்சை செய்யும்போது கையுறைகள், முக உறைகள், கௌன்கள் போன்றவற்றை அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் அணியும் முறை 1875 ஆம் ஆண்டு அறிமுகமானது.

## ஆராய்ச்சிக்கு உதவியவர்:

ஜோன் ஹன்டர் என்பவர் புகழ்பெற்ற ஆங்கிலேயே அறுவை சிகிச்சை நிபுணர். அந்த உடலியல் நிபுணர், ஈ முதல் திமிங்கலம் வரை சுமார் 14 ஆயிரம் பிராணிகளின் சடலங்களை சேமித்து வைத்தார். அவற்றுள் அபூர்வ உருவமுள்ள மனிதர்கள் மற்றும் மிருகங்களும் இருந்தன. மருத்துவத்துறை முன்னேற்றத்திற்கு 14,000 பிராணிகளின் உருவ உள்ளமைப்புகளும் மிகவும் பயன்பட்டன.

## முதல் மருத்துவ பத்திரிகை:

அறிவுத் தாகமும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும் வளர்ந்ததால் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் தங்கள் கண்டுபிடிப்புகளின் விவரங்களைப் பரிமாறிக்கொள்ள விஞ்ஞானப் பத்திரிகைகளையும், மருத்துவ இதழ்களையும் தொடங்கினர். பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மருத்துவ இதழ்கள் வெளிவர ஆரம்பித்தன. முதல் மருத்துவப் பத்திரிகை 'மெடிசினா குரிஸோ' என்பதாகும். இது ஆங்கிலப் பத்திரிகை. இதன் பிறகே பல மொழிகளிலும் மருத்துவப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசைப் பிடிப்பு என்பதை வாய்வுக் குத்து, குடைச்சல் என்று கூறுவர். ஆங்கிலத்தில் இதை "கிராம்ப்" என்பர். தசை நார்ச் சுரிப்பு, தசை மரத்தல், தசை இசிவு, பிடியிருக்கம் என்ற பெயர்களில்கூட இது அழைக்கப்படுகிறது. கடுங்குளிரினால் அல்லது மட்டுமீறிய தளர்ச்சியினால் உண்டாகும் தசைநார் பிடிப்பு இது எனலாம். தசைப் பிடிப்பு என்பது திடீரென்று கால் தசைகள் இறுக்கமுற்று கடுமையாக வலிப்பதைக் குறிக்கிறது. இது இரவில் படுத்தபின்பு உறக்கம் வரும் வேளையில் அல்லது விடிந்து எழும் வேளையிலும் உண்டாகும்.

**தசைப் பிடிப்பு ஏன் உண்டாகிறது?**

- கடுமையான உடற்பயிற்சி, விபத்து, பளுவான வேலை காரணமாகத் தசைகளை அதிகம் பயன்படுத்துவது.
- கர்ப்ப காலம்- கர்ப்பமுற்ற பெண்களுக்கு கல்சியமும் மக்னீசியமும் குறைவு படுவதால் தசைப் பிடிப்பு உண்டாகலாம்.
- குளிர் அல்லது குளிர்ந்த நீர் உடலில் படுவது.
- இரத்தக் குழாய்கள், சிறுநீரகம், தைராய்டு சுரப்பி கோளாறுகள்.
- நீரிழிவு நோயாளிகளுக்கு காலில் உள்ள இரத்தக் குழாய்கள் சுருக்கமுற்று இரத்தக் குறைவால் இது உண்டாகிறது.
- வெகு நேரம் நிற்பது, வெகு நேரம் அமர்ந்தி ருப்பது, உறங்கும்போது கால்களைத் தவறான முறையில் வைத்திருப்பது.
- இரத்தத்தில் பொட்டாசியம், கல்சியம் குறைவு. உடலில் போதுமான நீர் இல்லாதிருப்பது.
- சில மருந்துகள் உட்கொள்ளுவது.மனநோய் மருந்துகள், இரத்தக்கொதிப்பு மாத்திரைகள், சிறுநீர் வெளியேற்றும் மருந்துகள், கருத்தடை மருந்துகள், ஹார்மோன் மாத்திரைகள், கொழுப்பு குறைக்கும் மாத்திரைகள் சில உதாரணங்கள். டையேலிசிஸ் என்னும் இரத்தச் சுத்திகரிப்பு செய்து கொள்வது.

**தசைப் பிடிப்பை எப்படிக் குணப்படுத்துவது?**

- கால்களை நீட்டி அழுத்தி நீவி விடுவது..
- சுடு நீரில் குளிப்பது அல்லது சுடுநீர் ஒத்தடம் தருவது.
- ஐஸ் ஒத்தடமும் தரலாம்.
- வலி குறைக்கும் மாத்திரைகள் உட்கொள்வது.
- நிறைய நீர் பருகுதல்.
- படுக்கு முன் கோப்பி அல்லது மது அருந்துவது கூடாது.
- மல்லாக்கப் படுத்துத் தூங்கினால் கால் விரல் களை நேராக உயர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.
- மருத்துவரைப் பார்த்து அவர் தரும் வலி நிவாரண மாத்திரைகள் உட்கொள்ளுதல்.

**நொச்சிப்பூ - நீலி**
Chaste Tree Flower



நொச்சிப் பூவினை அரைத்துச் சிரங்குகள் மீது தடவி வந்தால் விரைவில் குணமாகும்.

**பன்னீர் பூ - மரமல்லி -**
Millingtonia hortensis - Indian Cork



வாந்தி, நாக்கில் சுவையின்மை, தண்ணீரத் தாகம், உடற்சூடு ஆகியவை தீரும்.

கண்களில் எந்த நோய் தென்பட்டாலும், அன்னாசிப்பழம் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குணமாகும்.




**தசைப்பிடிப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புலம்பெயர்ந்தவர் குறித்த வத்திக்கானின் காணொளிக்கு விருது


புலம்பெயர்ந்தவர் மற்றும் குடிபெயர்ந்தவர் எதிர் கொள்ளும் நெருக்கடிகளை உலக சமுதாயத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தில், திருப்பீட ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற அவை தயாரித்த குறித்த காணொளி ஒன்றிற்கு, பன்னாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு சமூக விளம்பர விழா எனப்படும் உலக ளாவிய அமைப்பு, திருப்பீட ஒருங்கிணைந்த மனித முன் னேற்ற அவையின், புலம்பெயர்ந்தவர் மற்றும் குடி பெயர்ந்தவர் துறை தயாரித்த காணொளிக்கு, இந்த விருதை வழங்கியுள்ளது. இந்த காணொளித் தயாரிப் புக்கு, Machi சமூகத்தொடர்பு நிறுவனம் உதவியுள்ளது.

இஸ்பெயின் நாட்டு தலைநகர் மத்ரித்தில், நடை பெற்ற 12வது விளம்பரவிழா நிகழ்வில், உலகெங்கிலுமி ருந்து நிறுவனங்களும், விளம்பரதாரர்களும் கலந்து கொண்டனர்.

வத்திக்கான் தயாரித்துள்ள இந்த காணொளி மூன் றரை நிமிடம் கொண்டது. புலம்பெயர்ந்தவர் மற்றும் குடிபெயர்ந்தவர்களை வரவேற்று, பாதுகாத்து, ஊக்கு வித்து, ஒருங்கிணைப்பதற்கு, அரசுகளும், நிறுவனங்க ளும், பொது மக்களும் ஆற்றவேண்டிய செயல்கள் பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தக் காணொளி யில் பேசியுள்ளார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



## இமயமாகும் இளமை

### இயற்கையை மேலும் உடைக்காமல் விடுங்கள்



முதல் பூமிக்கோள உச்சி மாநாடு 1992ம் ஆண்டு ரியோவில் நடைபெற்றபோது, செவர்ன் கல்லிஸ் சுசுகி (Severn Cullis Suzuki) என்ற 12 வயதுச் சிறுமி, உலகத் தலைவர்களிடம் 6 நிமி டங்கள் பேசினார். அச்சிறுமியின் சொற்கள், உலகத் தலைவர்களின் உள்ளங்களில் அம்புக ளாய்ப் பாய்ந்தன. அன்று, அச்சிறுமி சொன்ன கசப்பான உண்மைகள், இன்றும் இவ்வுலகில் நம்மை வாட்டியெடுக்கும் கேள்விகளாக ஒலிக் கின்றன. சிறுமி செவர்ன் சுசுகி சொன்ன ஒரு சில உண்மைகளைப் பார்ப்போம்:

"நீங்கள் சிறுவர்களாய் இருந்தபோது என்னைப் போல் சூரியனையும், காற்றையும் பற்றிப் பயந் தீர்களா? கவலைப்பட்டீர்களா? நான் வாழும் இந்த உலகில் நடக்கும் பயங்கரங்களுக்கு என்ன பதில் என்று சிறுமி எனக்குத் தெரியாது. உங்களுக்கும் அந்தப் பதில்கள் தெரியாது என்ற உண்மையை நீங்கள் உணர வேண்டும் என்று கூறவே நான் இங்கு வந்திருக்கிறேன்.

விண்வெளியில் ஓசோன் படலத்தில் விழுந் துள்ள ஓட்டையை அடைக்க உங்களுக்குத் தெரியாது.

இறந்து போகும் உயிரினங்களை மீண்டும் உயிர்ப்பிக்க உங்களுக்குத் தெரியாது.

காடுகள் அழிந்து பாலை நிலங்களாய் மாறி வருவதைத் தடுக்கும் வழிகள் உங்களுக்குத் தெரியாது.

உடைந்து போன இயற்கையைச் சரி செய்ய உங்களுக்குத் தெரியாதபோது, அதை மேலும் உடைக்காமல் விடுங்கள். அது போதும் எங்கள் தலைமுறைக்கு."

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள்

--ஒரு குறும்பார்வை




**அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை.

சென்ற மாத தொடர்ச்சி...

**6. மனித உழைப்பு**
(Laborem Exercens) **செப்டம்பர் 14, 1978**

திருஅவையின் முதலாவது சமூகப் போதனையாகிய 13ம் லீயோவால் 1891ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'தொழிலாளர் நிலைமை' என்கின்ற சுற்றுமடலின் 90வது ஆண்டு நிறைவில் திருத்தந்தை (தற்போதைய புனிதர்) 2ஆம் ஜோன் பவுலால் (2ஆம் அருள் சின்னப்பர்) வெளியீடு செய்யப்பட்டதே இச்சுற்று மடலாகும். இதுவே 'மனித உழைப்பு' குறித்து வெளிவந்த முதலாவது திருச்சபையின் சமூகப் போதனையாகும். 'உழைப்பு மனிதர்களுக்காக உள்ளதேயன்றி மனிதர்கள் உழைப்புக்காகவல்ல' என்கின்ற தத்துவார்த்த போதனையை உலகிற்கு வழங்கியதுடன், மனிதர்களை உழைப்புக்குப் பயன்படும் ஒரு கருவியாகக் கருதுவதும், பயன்படுத்துவதும் தவறு என்கின்ற செய்தியினை உலகிற்கு உரத்துச் சொன்னது.




இதிலிருந்து பிறக்கின்ற அடுத்த விடயமானது, 'உழைப்பு முதலீட்டை விடவும் முதன்மை வாய்ந்தது.' உழைப்பின் நோக்கம் முதலீட்டைப் பெருக்குவதல்ல மாறாக முதலீடு உழைப்பிற்கு உதவ வேண்டும். அதனூடாக வாழ்வின் அனைத்து நிலைகளையும் பொருளாதாரம் என்கின்ற கொள்கைகளுக்கு அடக்குவது அல்லது காண விளைவது தவறென்கின்றது.

ஏனைய சமூக ஏடுகளைப் போன்று தனிச் சொத்துரிமைக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. அதேவேளையில் 'தனிச் சொத்துரிமை பொது நலனுக்குப் பிற்பட்டதே' என்கின்ற கருத்தையும் ஆழமாக வலியுறுத்துகின்றது. படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் அனைவருடைய பாவினைக்கும் உட்பட்டிருக்க வேண்டுமென்ற அடிப்படைத் தத்துவத்தற்கு தனிச் சொத்துரிமை கட்டுப்பட்டுள்ளது என்பதனை போதிக்கின்றது. இக்கருத்தானது இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் இன்றைய உலகில் திருஅவை என்கின்ற போதனையில் எண் 69இல் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனையே திருத்தந்தை 2ஆம் யோன் பவுல் இம்மடல் எண் 14இல் மீளவும் வலி யுறுத்துகின்றார்.

எனவே, இம்மடலின் மையம் மனித உழைப்பே. மனிதரை மையப்படுத்தியே முதலீடோ, உற்பத்திப் பொருட்களோ மையம் கொண்டிருக்க வேண்டுமே தவிர அவை மனிதரை அடிமைப்படுத்துவதாக மாறி விட முடியாது.

**13. 'நம்பிக்கைப் போதனை பேராயப் போதனை 'விடுதலை இறையியல்'**
(Liberation Theology) 1984, 1986

வத்திக்கானின் நம்பிக்கைப் போதனை பேராயமானது (Congregation for the Doctrine of Faith) 'விடுதலை இறையியலின் சில அம்சங்கள் பற்றிய அறிக்கை' என்கின்ற ஏட்டினை ஆகஸ்ட் 6, 1984இல் வெளியிட்டது. விடுதலை இறையியலின் அடித்தளங்களுள் ஒன்று. உலகிலுள்ள அநீதியினை நீக்கி அதிக நீதியும், சகோதர உறவும், சமத்துவமும் நிறைந்த சமுதாய அமைப்பினை உருவாக்குவதாகும். அவ்வாறே திருஅவையின் சமூகப் போதனையும் உலகில் நீதியினை நிலைநாட்டப் போராட வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தி நிற்கின்றது.



அதன் அடிப்படையில் திருஅவையின் பேராயம் வெளியிட்ட விடுதலை இறையியல் குறித்த போதனையானது முக்கியத்துவம் மிக்கதாகும். அதன் போதனையின்படி விடுதலை இறையியலானது திருஅவையின் அடிப்படை நம்பிக்கையுடன் இயைந்து போவதுடன், விவிலிய விடுதலைக் கருத்தியலை ஒத்தது எனவும் எடுத்துரைக்கின்றது, (காண்க: எண் 2:1).

இவ்வேடு வெளிவந்தபோது இதுகுறித்துப் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதாவது திரு அவை விடுதலை இறையியலை அடியோடு வெறுக்கின்றதென்றும், அது மார்க்சியச் சித்தாந்தத்தினை அடியொற்றி வன்முறையினைத் தூண்டுகிறெதனவும் கூறப்பட்டது. ஆயினும், இப்போதனையாது விடுதலை இறையியலை அடியோடு கண்டனம் செய்யவில்லை மாறாக, போதிய முன்னாய்வு இன்றி மார்க்சியக் கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி – *II* கத்தோலிக்கத் திருமறை நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**சுருக்கமான விடை தருக :**

05. அ) இறையாட்சி எப்போது வரும் என்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டதற்கு இயேசு கூறிய பதில் யாது?
    ஆ) இலங்கையில் பின்பற்றப்படும் ஒழுக்க விழுமியங்கள் மூலம் இறையாட்சியின் மதிப்பீடுகள் யாவை?

06. அ) இயேசு விண்ணேற்பு அடையுமுன் தமது சீடர்களிடம் திருமுழுக்கு தொடர்பாக கட்டளையிட்டுக் கூறியது யாது?
    ஆ) திருமுழுக்கு அடையாளம் மூலம் நாம் பெறும் இறையருள்கள் யாவை?
    இ). ஞானப்பெற்றோராவதற்கான தகுதிகள் எவை?

07. அ) தூய ஆவி உங்களிடம் வரும்போது எவ்வாறு செயற்படவேண்டுமென இயேசு திருத்தூதர்களிடம் கூறினார்?
    ஆ) உறுதிப்பூசுதல் பெறுவதற்கான தகுதிகள் யாவை?
    இ) உறுதிப்பூசுதலூடாக எமக்குக் கிடைக்கும் கொடைகள் எவை?

**விடைகள் 26ம் பக்கத்தில் ....**

விடுதலை இறையியலின் சில பாணிகளில் பயன்படுத்தப்படுகின்றன என்றும், அவை தவறு என்றும் இவ்வேடு கற்பிக்கின்றது. அத்துடன் விடுதலை இறையியலின் பாணிகளில் பல நலமான போக்குகளும் உண்டு மேலும், மார்க்சியப் பகுப்பாய்வினைத் தகுந்த எச்சரிக்கையுடன் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை எனும் கருத்திலும் இம்மடல் போதிக்கின்றது.

தொடர்ந்து நம்பிக்கை அறிக்கைப் பேராயமானது மார்ச் 22, 1986இல் 'கிறிஸ்தவ சுதந்திரம், விடுதலை பற்றிய அறிக்கை' எனும் ஏட்டினை வெளியிட்டது. இயேசுவின் போதனையின் மையங்களாகிய சுதந்திரம், விடுதலை போன்ற கருத்துருவாக்கங்களின் கொள்கை சார்ந்த, நடைமுறை சார்ந்த விளக்கங்களை இவ்வேடு எடுத்துரைக்கின்றது. விடுதலை இறையியலின் அடிப்படைப் பண்புகளை இவ்வறிக்கை ஏற்றுக் கொண்டுள்ளது. குறிப்பாக ஏழ்மை, அடக்குமுறை, அநீதி நிறைந்த சூழல் போன்றவை குறித்து தெளிவான விழிப்புணர்வினை வழங்கியுள்ளது. மேற்சொல்லப்பட்ட அநீதியான சூழலமைவு நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை அகற்ற, எதிர்க்க வேண்டிய தேவையினை இவ்வறிக்கை சுட்டிக் காட்டுவதுடன் அதற்கான நடைமுறைச் செயற்பாட்டிற்கான அறைகூவலையும் விடுக்கின்றது. இறைவன் தம் மகன் வாயிலாக அனைவருக்கும் விடுதலை அளிக்கின்றார் என்கின்ற பின்னணியில் விவிலியம் விடுதலை வரலாறாக நோக்கப்படுவது இவ்வேட்டின் தனிச் சிறப்பாகும்.

**14. திருஅவையின் சமூக ஈடுபாடு**

(Sollicitudo Rei Socialis) **டிசம்பர் 30, 1987**

திருத்தந்தை 2ஆம் யோன் பவுல் அவர்களால் வெளியிடப்பட்ட இச் சுற்று மடலானது 1967ஆம் ஆண்டில் திருத் தந்தை 6ஆம் பவுல் அவர்களால் வெளியிடப்பட்ட 'மக்களின் முன் னேற்றம்' என்கின்ற சுற்றுமடலின் 20ஆம் ஆண்டின் நினைவாக வெளியிடப்பட்டது.





மக்களின் முன்னேற்றம் எதிலே தங்கியுள்ளது என்கின்ற கேள்வியினையெழுப்பி அதற்கு விடை காண முனைந்த திருந்தந்தை 6ஆம் பவுலின் கருத்தினை வலியுறுத்துகின்ற கருத்துக்கள் 'திருஅவையின் சமூக ஈடுபாடு' எனும் மடலில் மீள்வலியுறுத்தப்படுகின்றன. அத்துடன் இன்றைய நிலையில் 'பின்தங்கிய நிலை' (Backwardness) எதில் தங்கியுள்ளது என்பதனையும் ஆய்வு செய்கின்றது. மக்களின் முன்னேற்றம் எதிலே தங்கியுள்ளது என்கின்ற கேள்வியினை எழுப்பி அதற்கான விடையினைக் காணவும் முயற்சிக்கின்றது. சமூகத்திலுள்ள அனைத்து மாந்தரும் முன்னேற்றம் அடையவேண்டுமெனின் அதற்கு 'கூட்டுத் தோழமை' (Solidarity) அவசியம் என்கின்ற கருத்தினையும் முன்மொழிவு செய்கிறது. கூட்டுத் தோழமையென்பது சமூக அன்பாகும். சமூகத்தில் அனைவரும் ஒருவர் ஒருவருடன் இணைந்துள்ளார்கள் என்பதால், அடுத்தவருடைய நலனைப் பேணுவதிலும், மேன்மையுறச் செய்வதிலும் அனைவரும் இணைந்து செயல்முறையில் ஈடுபட வேண்டும். அந்த வகையில் கூட்டுத் தோழமை யென்பது சமூக அன்பினில் பிறக்கின்ற சமூக நற்பண்பாகும்.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதுதாண்டா அரசியல்



பாழூர்வேந்தன்

## ஓ! ஜெருசலேமே!

கடந்த இதழ் தொடர்ச்சி ....

பயாடொச்சை யுத்தங்கள் முடிவடைந்ததும் அலெக்ஸாந்தரின் மரணத்தையடுத்து, ஜெருசலேமும். யூதாவும் முதலாம் புட்டலொமி மன்னனின் கீழ் புட்டொலொமியர்களின் கைக்குள் வந்தன. அவர்களும் யெகுட் நாணயங்களை வார்ப்பதைத் தொடரவே செய்தார்கள். சிறிது காலத்தின் பின் கி.மு. 198 ஆம் ஆண்டு வாக்கில் அரச கட்டில் ஏறிய ஐந்தாம் புட்டொலொமியன் பனியும் யுத்தத்தில் தோல்வியுற்று ஜெருசலேமையும், யூதாவையும் மாவீரன் அந்தியோகுஸ் புருட்டாவினது செலிசியுட் படைகளிடம் இழந்தான். செலிசியுட்களின் ஆதிக்கதில் அநேக யூதர்கள் பண்டைய கிரேக்கக் கலாச்சார மற்றும் மொழிகளுக்கு மாறினர் என்பது மட்டுமல்லாமல், அவர்களது ஆதரவுடன் ஜெருசலேமிலும் பண்டைய கிரேக்க மொழி மற்றும் கலாச்சாரங்களை அங்கு நிலைநாட்ட முற்பட்டனர். இம் முயற்சியானது கடைசியில் தலைமைக் குரு மதித்தியாகு பென் யொகனானினதும் அவரது ஐந்து புதல்வர்களான சைமன், யோச்சனன், எலியசர், ஜொனத்தன், மெக்கபீக்கள் என்றழைக்கப்பட்ட யெகதா ஹா – மக்கெபி ஆகியோரது புரட்சி வெடித்து அதன் பலனாய் ஜெருசலேம் சுதந்திர ஹஸ்மோனியர் இராட்சியத்தின் தலை நகரமாகும் வாய்ப்பை மீண்டும் பெற்றது.

### ஹஸ்மோனிய காலகட்டம்

ஹஸ்மோனிய இராட்சியமானது 103 ஆண்டு காலம் நீடித்தது. அது முதலில் மதித்தியாகுவின் மகன் சைமன் மக்கபேயுவால் ஆளப்பட்டது. பின்னர் அவனது சகோதரனான ஜோன் ஹைர்கானுஸ் என்று அறியப் பட்டிருந்த யொகனானால் அரசு செய்யப்பட்டது. இவனுடைய காலத்தில் அவர்களுக்குச் சொந்தமாக ஹஸ்மோனிய நாணயம் உருவாக்கப்பட்டது. அவனுக்குப் பிறகு யெகுதா அரிஸ்டோபுலுஸ் என்பவனும், அவனைத் தொடர்ந்து அவனுடைய மனைவி சலோமி அலெக்சாந்திராவும், அவளுக்குப் பின் யெகுதாவின் சகோதரன் அலெக்சாந்தர் யன்னாய் என்பானும் பின்னர் முறையே அவனுடைய மக்கள் இரண்டாம் ஹைர்கானுஸ், இரண்டாம் அரிஸ்டோபியூலஸ் ஆகியோரும் ஆட்சி செய்தனர்.

ஹைர்கானுஸ், அரிஸ்டோபியூலஸ் ஆகிய இரு சகோதரர்களும் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்க உரோமையின் தலையீட்டைத் தனித்தனியாகக் கோரி நின்றனர். இதனால் யூதேயா உரோமையின் சுயாதீனமுள்ள மாகாணமாக, அதே சமயம் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம் கொண்ட பிரதேசமாகவும் மாற வழிசமைத்துக் கொண்டார்கள். கடைசியான ஹஸ்மோனிய அரசனாக இருந்தவன் அரிஸ்டோபியூலசின் மகன் அந்திகோனுூர் இரண்டாம் மதித்தியாகு ஆகும்.



கிரேக்கத்தில் 'அகிரிப்பா அரசன்' என்று பொறியப்பட்டிருந்த முதலாம் அகிரிப்பா காலத்து நாணயம்.

### உரோமையர்களின் ஜெருசலேம்

கி.மு. 37 இல் 40 நாள் முற்றுகையின் பின்னர் பெரிய ஏரோது ஜெருசலேமைக் கைப்பற்றினான். அத்தோடு ஹஸ்மோனியர்களது ஆட்சி முடிவுற்றது. ஏரோதானவன் உரோமையின் முகவராக யூதேயா மாகாணத்தை ஆட்சி செய்தான். இவன் காலத்தில் இரண்டாம் ஜெருசலேம் தேவாலயம் மீள அமைக்கப்பட்டதுடன், சுற்றியிருந்த கட்டடத் தொகுதிகள் தரம் உயர்த்தப்பட்டன. மேலும் அவன் நாணய உற்பத்தியை மற்றைய பரிமாணங்களுக்கும் (பெறுமதிகள்) ஆரம்பித்து வைத்தான். மூத்த பிலினி என்கிற சரித்திரவியலாளர் ஏரோதின் காலம் பற்றி, அவனது சாதனைகள் பற்றி விபரிக்கின்ற பொழுது யூதேயாவின் நகர்களுக்குள் என்று மட்டுமில்லாமல் கிழக் கத்திய நகரங்களுக்குள்ளே மிகவும் பிரபலமான நகரமாக ஜெருசலேமை உருவாக்கியெடுத்த சாதனையைக் குறிப்பிடுகின்றார். தல்மட் என்பவரோ 'தம் வாழ் நாளில் ஏரோதின் ஜெருசலேம் தேவாலயத்தைக் காணாத வர்கள் தம் வாழ்வில் அழகிய அமைப்புக்களை காணும் பாக்கியமற்றவர்கள்' என்ற குறிப்பிடுகின்றார். தசிற்றஸ் 'ஜெருசலேம் ஆனது யூதர்களின் தலைநகரம். அதிலே உள்ள தேவாலயம் பிரமாண்டமான அளவு செல்வங்களைக் கொண்டது.' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஏரோது இத்தோடு நிறுத்தி விடவில்லை. உரோமை மகாணத்தின் தலைநகரான ஜெருசலேமை மாற்றி அமைக்க 'செசாரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரிசிமா'வைக் கட்டியெழுப்பினான். கி.மு. 4இல் ஏரோதின் மறைவையடுத்து கி.பி. 6ஆம் ஆண்டில் யூதேயாவும், ஜெருசலேமும் உரோமையின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கப்டன்களாலும், திறைசேரி அதிகாரிகளாலும், அரசப் பிரதிநிதிகளாலும் ஆளப்படுகின்ற பகுதிகளாக வந்தன. ஏரோதின் வழித்தோன்றல்களான முதலாம் அகிரிப்பா (கி. பி. 41-44), இரண்டாம் அகிரிப்பா (கி.பி. 48-100) சாதாரண பேரளவில் நியமன அரசர்களாக யூதேயா மாகாணத்தில் இருந்து வந்தனர்.



புரட்சிகர யூத 'கெஷக்கேல்' நாணயம் 68 இல் வெளிவந்தது. அதில் 'கெஷக்கெல் இஸ்ரேல் 3' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

**ஜெருசலேம் சூறையாடப்படுதல்**



உரோமில் 'டைட்டஸ் வளைவு' இனது உட்புறத்தில் யூதர்களின் உற்சவ சின்னமாகிய ஜெருசலேம் தேவாலய மெழுதிரி தாங்கி 'மெனேரா' ஜெருசலேம் மீது உரோமை கொண்ட வெற்றியின் சின்னமாக ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட காட்சி செதுக்கப்பட்டுள்ளதை இன்றும் காண முடியும். இதற்கான வரலாறு பின்வருமாறு அமைகின்றது. கி.பி.66 இல் யூத மக்கள் உரோமை சாம்ராஜ்யத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். இதுவே முதலாவது யூத – உரோமை யுத்தம் அல்லது பெரும் புரட்சி என்று அறியப்பட்டது. கிபி. 70 இல், வருங்காலத்தில் சர்வாதிகாரியாக உருவெடுத்த டைட்டஸ் என்பவனின் தலைமையில் உரோமைப் படையணி ஜெருசலேமை மீளக் கைப்பற்றி ஜெருசலேமின் பெரும் பகுதியை அழித்தான். இரண்டாவது ஜெருசலேம் தேவாலயத்தை எரித்தான் (இயேசு சொன்ன கல்மேல் கல் இராதபடி அழிவுறும் என்கின்ற வாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது). எஞ்சியதென்னவோ தேவாலயம் உரவாக்கப்பட்ட மைதானத்தைத் தாங்கிக் கொண்டிருந்த வெளிச் சுற்றுமதில் மட்டும்தான். அதுவே மேற்குச் சுவர் என்று இன்றும் அறியப்பட்டிருப்பது. (இதை இஸ்ரேலியர்கள் இப்போதும் தமக்கான பொக்கிஷமாக வைத்திருக்கிறார்கள்). டைட்டசின் இந்த வெற்றியின் நினைவுச் சின்னமாக உரோமில் அமைக்கப்பட்ட 'டைட்டஸ் வளைவு' மூலம் எடுத்துக் காட்டப்பட்டது.

கி.பி. இரண்டாம் அகிரிப்பா மரணமானதைத் தொடர்ந்து இரண்டாலது ஜெருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்த நிலையில் ஏரோது அரச பரம்பரையின் ஆதிக்கமும் முடிவுக்கு வந்தது. புரட்சி முடிவடைந்த பின்னர் யூதர்கள் குறிப்பிடத்தக்க அளவிலேயே ஜெருசலேமில் தங்கி இருந்தனர். மதச் சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக அவர்கள் 'யூத வரியை' செலுத்த வேண்டியிருந்தது.

உரோமையின் வெற்றியை நினைவுகூர கி.பி. 71 ஆம் ஆண்டில் வார்க்கப்பட்ட 'யூதேய கப்டா' நாணயத்தில்

'யூதேயா கைப்பற்றப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது



தொடரும் ....

## வினா விடைப் போட்டி - இல 02

**சரியான விடைகள்**

1. திருத்தந்தை 16ம் பெனடிக்ற்
2. பிரான்சுவா சுப்ரியுஸ், லூயிஸ் காஸ்தேரோ
3. ஜீ.எஸ்.ரீ
4. 1954 சித்திரை 02இல் / 33வது மகாநாடு
5. சூரிய ஒளியால் நம் உடல் தயாரிப்பது
6. 6ம் சின்னப்பர்
7. யோவான் 21:16
8. சுயப்பாவின் அன்னை கன்னி மரியாள்
9. இராவணன்
10. "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்"

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்டசாலிகள்**

S.P. றொசானி, 5ம் குறுக்கு, திருப்பெருந்துறை, மட்டக்களப்பு.

**திருமதி. பத்மாமேரி இரத்தினசாமி**
இல. 133A, அம்மன் கோவில் வீதி, கல்முனை - 01.

**ஜூ. மெலனி**, 135, லேடி மெனிங் டிரைவ், மட்டக்களப்பு.




## அரசாட்சி

**இனங்களுக்கு இடையினிலே** **மோதல்**
**ஏழை அப் பாவிமக்கள்** **சாதல்**
**வணக்கத் தலத்தோடு மக்கள்**
**வாழும் மனை கூடத் தீயில்...!**
**சுணக்கமின்றி அமைதி தரும் வழியே** **அரசாளல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விடை தெரியாத வினாக்கள்

D. துஷான் ஜெஸ்லி




இன்று நானும், தங்கையும் அப்பாவுடன் அப்பம்மா வீட்டில் மதிய உணவுக்குச் செல்வது என்று ஏற்பாடு. இருவர் உள்ளத்திலும் கொள்ளை மகிழ்ச்சி. அப்பம்மாவிற்கு வயதாகிவிட்டது. கண்களும்கூட மங்கிவிட்டன. நடப்பதற்கும் சிரமப்படும் நாட்கள். ஆனால், சமையல் அப்படியொரு ருசியாக இருக்கும். உங்களுக்கு மட்டும் இவ்வளவு ருசியா எப்பிடி அப்பம்மா சமைக்க முடியுது. என்னென்ன போட்டு சமைப்பீங்க சொல்லுங்க என்று கேட்டேன். "என்னடா மனே வழமையா எல்லாரும் போடுற சரக்குச் சாமானுகள் தான்.... ஆனா என்ன அதோட கொஞ்சம் பாசத்தையும் கலந்துபோடுவன்" என்றா. வயோதிப முகத்தில் சிரிப்பு.

அப்பாவின் இரண்டு உதைகளுடன் உருளத் தொடங்கியது மோட்டபைக். பிரதான வீதியில் திரும்பியது. வீதியின் ஓரமாய்க் கவனிப்பாரற்றுக் கிடந்தன அந்தச் செருப்புகள். சற்றுப் புதியன போலத் தெரிகின்றன. அப்பாவின் கைகள் தளர்கின்றன. வேகம் குறைந்து லேசாக உருளுகின்றது. உடைந்து கிடக்கும் சைக்கிள் அருகில் திட்டுத் திட்டாக இரத்தத் தாரைகள். அழுகுரல்கள். ஒரு சிறுமி அழுதபடியே ஓடோடி வருகிறாள். தன் பிஞ்சுக் கைகளால் மண்ணொடு அந்த இரத்தத்தை அள்ளி "அப்பா! அப்பா!" என்று அழுகிறாள். மடையுடைந்த வெள்ளமாய் அவள் கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. மெல்லமாய் திரும்பி சிதறிக் கிடந்த செருப்புகளை வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்தபடி "அப்பா! அப்பா! எங்கட அப்பா! எங்கள விட்டுட்டுப் போயிட்டாரு...." தங்கை மெல்லமாக அழுகிறாள். எனது கண்கள் கனத்துப் போவதைப் பார்த்த அப்பா மோட்டபைக்கை நகர்த்துகிறார்.

நேற்றிரவு அந்த விபத்து நடந்தது. பாடசாலை விட்டுச் சில நண்பர்களுடன் டிஜிடல் பிறிண்டிங் கடைக்குப் போய் அஜித் படம் ரீசேர்டில் பதித்துத்தர முடியுமா என்று விசாரித்து சற்றுப் பிந்தி வந்து அம்மாவிடம் திட்டு வாங்கி கதிரையில் அயர்ந்துகொண்டிருந்தவேளை. அவசரமான குரல்கள் வாகன சத்தம். முன்னே சென்று எட்டிப்பார்த்த அம்மா "ரோட்டில அக்சிடன்ற் கெதியா வாங்களன்" என்று அப்பாவைக் கூப்பிட ஆர்வம் என்னையும் தொற்றிக்கொள்ள சட்டையை மாட்டிக்கொண்டு வெளியே வந்தேன். இரத்த வெள்ளத்தில் அவன் கிடந்தான். எதிரே வந்த ஆட்டோவை நிறுத்திச் சிலர் வைத்தியசாலைக்குக் கொண்டோடினர். வேறு சிலர் உருக்குலைந்த அவனின் முகத்தையும், ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தையும், மினுங்கியபடி நிற்கும் டிப்பர் வாகனத்தையும் புகைபடமெடுத்து பேஸ்புக்கில் போடத் தவித்துக்கொண்டிருந்தனர். சுயநலவாதிகள். திரும்பத் திரும்பச் சொன்னேன். எதிர்வீட்டுச் சுகுமார் அண்ணனிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்து விசாரித்தேன். "அவன் யாரென்று அடையாளம் காணமுடியவில்லை"

தலையில் கடுமையான அடி தம்பி யென்றார். தப்பமாட்டான் என்றார்கள் சிலர். டிப்பர் சாரதி இறங்கி ஓடிப்போய்ப் பொலிசிடம் சரண்டர் ஆகிவிட்டானாம்" என்றார்கள் சிலர். அயற் சமூகத்தவர்கள் சிலர் வேகமாக வந்திறங்கினர். வாகனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் அதிகம் அக்கறை காட்டியவர்களாக செல்பேசியில் விரைவாகப் பொலிசாரை அழைத்துக்கொண்டிருந்தனர். "தம்பி வா மகன்" அப்பாவின் குரலைத் தொடர்ந்து வீடு வந்துவிட்டேன்.

பொழுது புலர்ந்துவிட்டது. அதிகாலை கணிதப் பாட ரியூசனுக்காக விரைவாகப் புறப்பட்டு வெளி யேறியபோது முணுமுணுத்தபடியே "ஆமை" வந்தது. அடுத்த தெருவில் வசிக்கும் "கிழவிக்கு நானும், தங்கையும் சூட்டியிருந்த செல்லப் பெயர்தான் ஆமை"

"ராவு அடிபட்டவன் செத்துப் போனானாம் புள்ள" என்றபடியே ஆமை நகர்ந்தது.

"எமன் வீசிட்டான் பாசக் கயிறை. ஆரெண்டு தெரி யுமோ சிதம்பரம் மேசனோட கூலிவேலை செய்து திரிவானே நந்தன் அவன்தான் அடிபட்டுச் செத்தவன்..." என்றும் ஆமை சொல்லியபடியே போயிற்று. அவனை எனக்கு நன்றாகவே தெரியும். அவனது பிள்ளைகள் இதோ பக்கத்துப் பாடசாலையில்தான் படிக்கிறார்கள். காலையில் பாடசாலை செல்லும் அவர்களது முகம் ஒரு கணம் என் கண்முன். பாண் வாங்கவென பேக்கரிக்குப் போனவன் திரும்பவில்லை. சந்தியில் ஒலி பெருக்கி உயிர்க்கிறது. மரண அறிவித்தலை வாசிக்கிறார்கள். தொடர்ந்து சிவபுராணம் ஒலிக்கிறது. ஆட்டோ நகர்ந்து அடுத்தச் சந்தியிலும் மரண அறிவித்தல் தொடர்கிறது.

நேற்று இதேவேளை முற்றத்தில் பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருந்து விட்டு இந்தா இப்ப சுணங்காம வாறன் எண்டு போனவன் அதோ மரண அறிவித்தலில் கலந்துபோனான்.

என் மனதில் விடை தெரியாத வினாக்கள் பல விழுகின்றன. அவன் ஒரு நிமிடம் முந்தி அல்லது அல்லது பிந்தி புறப்பட்டிருக்கலாமே? கடையில் ஒரு நிமிடம் தாமதித்திருக்கலாமே? ஏன் அப்படி நடக்கவில்லை? இதுதான் விதியா? இல்லை விதியென்ற பெயரில் நாம் நம்மை ஆற்றிக்கொள்ளும் நாடகமா? மண்டைக்குள் வண்டொன்று குடைய வலி தாங்க முடியவில்லை நடக்கிறேன். பாதை நீண்டு செல்கிறது.

**முற்றும்.**

## எண்ணிப்பார்க்கையில்...



**கடந்த காலத்தோடு சமாதானமாவோம்**

பல தடவைகளில் எமது கடந்த காலம்
எமது நிம்மதியையும், அமைதியையும்
தொலைத்துவிடுவதை நாம்
வாழ்வில் கண்டிருக்கின்றோம்.
நடந்ததையே நினைத்திருந்தால்
அமைதி என்றுமில்லை என்ற
கவிஞனின் வார்த்தைகள்
முழு அர்த்தம் கொண்டவை!
அமைதி தொலைந்த நிலையில்
நம் அன்றாட வாழ்வில் அல்லல்
நிறைந்தாடுகின்றது..
சற்றே எண்ணிப் பார்க்கையில் .. ..
நமது கடந்த காலத்தை ஏற்றுக் கொண்டு
அதோடு ஒப்புரவாகிவிட்டால்
நம் நிகழ்காலத்தை நாம் தொலைத்து
விட வாய்ப்பேயில்லை என்பது
நம் நெஞ்சுக்குப் புலனாகும்.
நமக்கு எது தேவை? கடந்துபோனதா?
நம்மோடு வந்து கொண்டிருப்பதா?
தெரிவு நம் கையில்!

**ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்**

**சா**ர்ஜில் இருக்கும் நேரத்தில் கைத் தொலைபேசிகளில் குழந்தைகள் கேம்ஸ் விளையாடு வதையோ, பேசுவ தையோ அனுமதிக் காதீர்கள்.... எப்போ தும் கண்காணிப்புடன் கண்டிப்பும் அவசியமாகும்...



**வீ**ட்டின் எந்த அறையிலும், குழந்தைக ளுக்குஎட்டும் உயரத்தில் பிளக்பொயின்ட் களை நிறுவவேண்டாம். அதற்குள் விரலை விடுவது, கூர்மையான பொருட்களை விட்டு விளையாடுவது என்று ஷொக் அடிக்கும் ஆபத்தை குழந்தை அறியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இலக்கிய மஞ்சரி



## ஏமாற்றப்படுதல்

- ஆழியோன் -

சில விளங்கிக்கொள்ள இயலாத விடயங்களை விளங்கவைக்க உதவும் சாதனங்களில் சினிமாவும் ஒன்று. அண்மையில் 'இரும்புத் திரை' என்ற பெயரில் திரைப்படமொன்று வெளிவந்திருந்தது. இதில் நடிகர், இயக்குநர், இசையமைப்பாளர் பற்றியெல்லாம் எமக்குத் தேவையில்லை; சொல்ல வந்த விடயம்தான் மிகவும் முக்கியம்.

இணையம், டெபிட்காட், கிரடிட் கார்ட் என்பன மூலமும், வங்கிக் கடன்கள் மூலமும் சராசரி மனிதர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றார்கள் என்பதை இப்படம் சொல்கின்றது. அதாவது இணையம் மூலம் பணப்பரிவர்த்தனை செய்யும் முறையில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி மூன்றாவது நபர்கள் எவ்வாறு பணத்தை வஞ்சனையாகப் பெறுகின்றார்கள் என்பதனை இது விளக்குகின்றது.

முற்றிலும் புதிய கோணத்தில், அற்புதமான வகையில் காட்சிகள் நகர்த்தப்பட்டு எம்மைப் பிரமிக்க வைக்கின்றன. எப்படியெல்லாம் நாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதனை இப்படம் படம்பிடித்துக் காட்டுகின்றது.

'வேலைக்காரன்' என்ற இன்னுமொரு திரைப் படம் சுப்பர் மார்க்கெட்டுகளால் எவ்வளவு தந்திரமாக நாம் கவரப்படுகின்றோம் என்பதைக் காட்டுகின்றது. அப்படத்தைப் பார்த்தால் நாம் சுப்பர் மார்க்கெட்டுகளின் பக்கமே போகமாட்டோம். பொருட்கள் அடுக்கப்படும்முறை, கடைக்குள் நுழைந்தால் நேரம் தெரியாமல் (மணிக்கூடுகளே காணப்படுவதில்லை) நேரத்தை செலவு செய்யும் தன்மை என்பனவெல்லாம் நம்மைக் கண்ணைக்கட்டிச் செலவு செய்யத் தூண்டும் முறைகளாகக் காணப்படுகின்றன. அடுக்குகளில் கீழ்த்தட்டில்தான் பிள்ளைகளுக்குப் பிடித்த இனிப்புகள், விளையாட்டுப் பொருட்கள் என்பன வைக்கப்படும். இலகுவாகப் பிள்ளைகள் அவற்றை எடுத்துவிடுவார்கள். வேறு வழியில்லாமல் பெற்றோர்கள் 'பில்' கட்டவேண்டிவரும். எவ்வளவு தந்திரமாக நாம் காய் நகர்த்தப்படுகின்றோம்.

அதேபோல், பெரிய பெரிய கம்பனிகளின் தொழிலாளர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றார்கள் என்பதனையும் இப்படம் விளக்குகின்றது.

வீடு வீடாகச் சென்று கூசாமல் பொய் சொல்லிப் பொருட்களை விற்பது; குறிப்பாக இலத்திரனியல் பொருட்கள். 'டார்கட்' (விற்பனை இலக்கு) காட்டுவது, இலகு தவணை அடிப்படையில் பொருட்கள் விற்பது போன்றவற்றின் பின்புலங்களை எமக்கு விளக்குகின்றது இப்படம்.

மொத்தத்தில் இவ்வியந்திரமயமான வாழ்க்கையில் நாம் அடிபட்டுச் சுழன்று இறுதியில் எல்லா நிறுவனங்களாலும் ஏமாற்றப்பட்டுச் சின்னாபின்னமாகி மன நோயாளிகளாக மாறிக்கொண்டிருக்கின்றோம்.

இதன் விளைவுதான் 'நுண் நிதி நிறுவனங்கள்'இன் நடவடிக்கையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 75 பேர் 5 மாதங்களில் தற்கொலை என்ற பத்திரிகைச் செய்தி; எண்ணிக்கை சரியோ, தவறோ விடயம் மட்டும் உண்மை.

பெண் விடுதலை, இன விடுதலைப் போராட்டங்கள் போன்று இவற்றில் இருந்தும் விடுதலை பெறப் போராட்டங்கள் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழகு

- அருட்பாவலர் நிலா தமிழின்தாசன் -

அழகு அழகு! அம்மா பாடும் தாலாட்டு
அருமை அழகு! அழகு!
அணைத்துக் கொஞ்சி அன்பு காட்டும்
அம்மா வடிவம் அழகு
அழகு! அழகு! அழகு!

பிஞ்சுக் கைகள் காலை ஆட்டி
சிரிக்கும் மழலை அழகு ஆமாம் அழகு அழகு!
கொஞ்சிப் பேசும் கரும்புப் பேச்சுக் கனிவு அழகு அழகு
கண்ணைச் சிமிட்டிக் காட்டும் சிரிப்பும் அழகு
ஆமாம்! அழகு! அழகு!



பள்ளிக்கூடம் சென்று படித்து வளருவதும் அழகு
பாதம் பணிந்து ஆசான்களை வணங்குவதும் அழகு
துள்ளிப் புள்ளி மான்கள் போல தோழரோடு கூடி மகிழ்ந்து
ஆடுவதும் அழகு ஆடி மகிழ்ந்து பாடுவதும் அழகு!
ஆமாம்! அழகு! அழகு!

பாசம் கொண்டு பண்பு கொண்டு அனைவரோடும்
பழகுவதும் அழகு ஆமாம் அழகு அழகு
ஈசன் பாதம் தினம் வணங்கித் தொழுவதுவும் அழகு
இனியமொழி அனைவரோடும் பேசுவதும் அழகு
இன்பமான உறவை வளர்த்தல் என்றும் அழகு அழகு!

தள்ளாடும் முதியவர்க்குத் துணைபுரிதல் அழகு
தவிக்கும் ஏழை பசிக்குதவல் அழகு
உள்ளந்தன்னில் அன்பை வளர்த்து உலகில் வாழ்தல் அழகு
உண்மை பேசி உத்தமராய் ஒன்றிவாழ்தல் அழகு
உலகில் உயர்ந்த வாழ்வு காணல் அழகு
ஆமாம்! அழகு! அழகு!

நல்லதை நினைத்து நல்லதே செய்ய
முடியாது உன்னால் என்றால் - கொஞ்சம்
தள்ளியே நில் நல்லது செய்யா விடிலும்
அல்லது செய்து பிறர் வாழ்வைக் கெடாதே




## பூச்சிகள்



நாம் வாங்கும் ஓர்கானிக் காய்கறிகளில் 20% முதல் 25% வரை வண்டுகள், பூச்சிகள் இருக்கத்தான் செய்யும். வண்டுகளே ஒதுக்கிய பழங்களையும், காய்கறிகளையும் நாம் வாங்குவது நம் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல. வண்டுகள் தாக்கிய பகுதிகளை மட்டும் அப்புறப்படுத்திவிட்டுக் காய்கறிகளைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசாங்கத்திற்கே கடன் கொடுத்த நபர் - கடைசியில் எப்படி மரணித்தார் தெரியுமா?



ரூட்ஷெல்ட். பிரிட்டனில் பெரும் செல்வந்தராக வாழ்ந்தவர். பிரிட்டன் அரசாங்கம் இவரிடமிருந்து கடனாகப் பெற்று தனது நாட்டை வழிநடத்தும் அளவிற்கு மகா செல்வந்தராக வாழ்ந்தவர்.

ஒருநாள் தனது பொக்கிஷங்கள் (கஜானா) நிறைந்த அறைக்குள் நுழைந்து கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் போது திடீரென திறக்க முடியாதவாறு கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

பல நாட்கள் பசி பட்டினியாக இருந்து மரணிக்கும் முன் சுவற்றில் சில வரிகளை எழுதினார் அதில் சில'

"நான் உலகில் மிகவும் உயர்ந்த மனிதனாக வாழ்ந்தேன். ஆனால், எனது சொத்துக்கள் என் முன் இருக்க, அந்தச் சொத்துக்களால் எனது பசி, தாகத்தைக் கூட போக்க முடியாத ஏழையாக மரணிக்கிறேன்". அவர் மரணித்து பல வாரங்களுக்கு பின்னரே அவரின் உறவினர்களுக்கு தெரியவந்தது.

பணத்தைக் கொண்டு எதையும் சாதித்து விடலாம் என்று எண்ணும் கபோதிகளுக்கு இந்தக் கதை ஒரு பாடமாக அமையும்.

# ஹிட்லர் காதலியுடன் தற்கொலை



ஒரு சோபாவில், உட்கார்ந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல். அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதன் நுனியிலிருந்து புகை வந்து கொண்டிருந்ததால், அவர் சற்று நேரத்துக்கு முன்தான் தன்னைச் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிந்தது. அவருடைய வலது காதுக்கு கீழ் அரை அங்குல அளவுக்கு துவாரம் விழுந்து, அதிலிருந்து இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. ஹிட்லர், துப்பாக்கி முனையை வாய்க்குள் வைத்து சுட்டதால் தான், குண்டு காதுக்கு அருகே துளைத்துக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று தளபதிகள் கருதினார்கள்.

ஹிட்லரின் வலது கரம் ஒரு புகைப்படத்தை மார்போடுஅணைத்தபடி இருந்தது. அந்தப்படம், ஹிட்லரின் தாயாரின் புகைப்படம். தாயின் மீது ஹிட்லர் கொண்டிருந்த பாசத்தை எண்ணி அவர் நண்பர்கள் கண்ணீர் சிந்தினர். ஹிட்லர் உடல் இருந்த சோபாவில் சாய்ந்தபடி பிணமாகியிருந்தாள் அவருடைய மனைவி ஈவா. வெள்ளைப் புள்ளிகளோடு கூடிய கருநீல 'மக்சி' உடை அணிந்திருந்தாள். அவள் உடல் நீலம் பாய்ந்திருந்தது. எனவே, அவள் சயனைடு விஷம் சாப்பிட்டிருக்க வேண்டும் என்பது புலனாகியது.


ஹிட்லர் உடலையும், ஈவா உடலையும் உதவியாளர்கள் ஒரு கம்பளிப் போர்வையில் சுற்றினார்கள். பிறகு அந்த உடல்களை அந்த அறையிலிருந்து தலைமைச் செயலகத் தோட்டத்திற்கு தூக்கிக் கொண்டு போனார்கள். அங்கே பெட்ரோலையும், எரிவாயுவையும் கொண்டு இரு உடல்களையும் எரித்துச் சாம்பலாக்கினார்கள். சில மணிநேரம் கழித்து அங்கு வந்த ரஷியப் படையினர் ஹிட்லரைக் காணாமல் திகைத்துப் போனார்கள். அவர் தற்கொலை செய்துகொண்டதும், பிணம் எரிக்கப்பட்டதும் பிறகுதான் தெரிந்தது. எனினும் ஹிட்லர் சாகவில்லை, தலைமறைவாக இருக்கிறார் என்று நீண்ட காலம் நம்பியவர்கள் ஏராளம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் இந்தக் கோலம்!






- அருட்சகோதரி
லூட்ஸ் F.M.M -

கத்தோலிக்கத் திருச்சபை இறை இயேசுவால் நிறுவப்பட்டது என்பதை நாமெல்லாம் நன்கறிவோம். பல வழிகளிலும் வளர்ந்து வந்த நம் திருச்சபையை பாப்பிறை 23ம் அருளப்பர் புதுப்பிக்க எண்ணம் கொண்டார். 1962ம் ஆண்டிலே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். அந்தச் சங்கத்தின் பின்னர் நம் கத்தோலிக்க சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. திருப்பலி திருவழிபாடுகள் மக்களை ஆர்வத்துடன் ஆன்மீகத்தில் வளர்ந்தோங்க வழி காட்டியது. பொது நிலையினர் வாழ்வில் புத்தொளி புலர்ந்தது.

இன்று கத்தோலிக்கர் பலர் திருமறையிலிருந்து விலகிப் புதிய சபைகளில் சேர்ந்துகொள்கின்றனர். சிலர் புதிய சபைகளை உருவாக்கி அதில் நம் கத்தோலிக்கரைச் சேர்த்துக்கொள்கின்றனர். இன்று அகிலமெங்கும் 65,000க்கும் மேற்பட்ட சபைகள் இயங்கி வருகின்றன. இயேசு ஜீவிக்கிறார், இயேசு அழைக்கிறார், விசுவாச விளக்கு, நாற்சதுரம் இப்படிப் பல சபைகள் உருவாகி உள்ளன. இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது அப்பத்தையும், இரசத்தையும் தன் உடலாகவும், இரத்தமாகவும் மாற்றித் தன் சீடர்களுக்கும், அவர்களைத் தொடர்ந்துவரும் அருட்தந்தையருக்கும் திருப்பலி வேளையில் இவ்வதிசயச் செயலைப் புரியும் அதிகாரத்தையும், ஆற்றலையும் வழங்கினாரே. இதே இயேசுவின் திரு உடலைத் திருப்பலி வேளையில் கத்தோலிக்க விசுவாசிகள் பெற்று மகிழும் பாக்கியம் பெற்றுள்ளனர். இதற்குப் பல சான்றுகள் உண்டு. இறையருளை நிறையருளாகப் பெறும் இத்தெய்வீகப் பலியில் பங்கெடுக்கும் பாக்கியம் பெற்றவர்கள் நம் கத்தோலிக்கர். அன்று இயேசு எம் திருச்சபையை வழிநடத்த அதிகாரத்தையும், பயிற்சியையும் சீடர்களுக்கு வழங்கியது போல் இன்றும் எம் திருச்சபையாம் அன்னை அருட்பணியாளர்கள் திருநிலைப்படுத்தப்படும் வரையும் அதன் பின்னரும் இங்கேயும், அயல் நாடுகளிலும் திருமறை, திருப்பலி, திருவிவிலியம் இப்படிப் பலவிதமான பயிற்சிகளின் பின்னரே திருநிலைப்படுத்தப்படுகின்றனர். இப்படி ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்தோங்கி வரும் நம் கத்தோலிக்க அருட்பணியாளர்கள் நடத்தும் ஜெபக் கூடங்கள், குணமளிக்கும் ஆராதனைகள், திருப்பலி வேளையில் எமது விசுவாசத்தை வளர்க்க வல்ல, அன்பிலே ஆழ்ந்து வாழக்கூடிய, எம் இதயத்தைத் தொடும் ஜெபங்கள் எல்லாம் எம்மைக் கிறிஸ்து அவனாக, கிறிஸ்து அவளாக வாழ வளர வைக்கின்றன. இவற்றை அறியாதோர் கண்ட கண்ட இடமெல்லாம் ஜெபக் கூடங்கள் வைத்து அதைத் தொழிலாக, பணத்திற்காக, பொருள் பண்டத்திற்காக, புகழுக்காக நடத்திக் கத்தோலிக்கரைத் தம் வசப்படுத்துகின்றமை எமக்கு வேதனையைத் தருகிறது. கத்தோலிக்க மக்களே ஏன் இந்தக் கோலம்? உண்மை மறையை விட்டு ஊர் சுற்றித் திரியாதீர்கள். அன்று காடு மேடெல்லாம் கடந்து அலைந்து திரிந்து நற்செய்தியைப் பறைசாற்றியோர் பலர் மண்ணை விட்டு மறைந்து விட்டனர். அவர்கள் சிந்திய இரத்தம் தொடர்ந்தும் வீண் போகாதிருக்க கத்தோலிக்கராகிய நாம் விசுவாசத்தில் வளர்வோம்! வாழ்வோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

## விடைகள்

05. அ) இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. இதோ இங்கே, அதோ அங்கே எனச் சொல்ல முடியாது. இறையாட்சி உங்கள் நடுவே செயற்படுகிறது.
ஆ) கரங்களைக் குவித்துக் கடவுளுக்குத் தோத்திரம் எனக் கூறுதல்
- பெரியோரை மதித்தல், உரிய கௌரவமளித்தல்
- பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் பாதம் பணிந்து வணங்குதல்
- மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து ஒதுங்கியிருத்தல்
- மூத்தோர், பெரியோர் முன்னிலையில் எழுந்து நிற்றல்

06. அ) நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்.
ஆ) - சென்ம பாவத்திலிருந்து கழுவப்படுகின்றோம். கன்ம பாவத்திலிருந்து விடுவிக்கப் படுகின்றோம்.
- இறைவனின் பிள்ளையாகின்றோம்.
- மூவொரு கடவுளின் பிள்ளையாகின்றோம்.
- ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்று பதியப்படுகின்றது.
- இறையரசின் உரிமையாளராகுதல்
- மற்றைய அருளடையாளங்களைப் பெறுவதற்கான தகுதியைப் பெறுகின்றோம்.
- குருத்துவ மேய்ப்பு, இறைவாக்குப் பணியில் ஈடுபடுகின்றோம்.
- கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்புகளாகின்றோம்.
- திருச்சபையில் அங்கத்தவராகின்றோம்.

இ) - புகுமுக அருளடையாளங்களைப் பெற்றிருத்தல் (திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை)
- 16 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- கிறிஸ்தவ நம்பிக்கையில் வாழ்ந்து கிறிஸ்தவக் கடமைகள், பொறுப்புகள் பற்றிய அறிவு உடையவராய் இருத்தல்.
- திருச்சபைச் சட்டங்களை மீறாதவராய் இருத்தல்.
- குழந்தையின் பெற்றோரால் தெரிந்துகொள்ளப்பட்டவராயிருத்தல்
- பிள்ளையின் பெற்றோர் அல்லாதிருத்தல்.

07. அ) தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப்பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.
ஆ) - திருமுழுக்குப் பெற்றிருத்தல்
- குறிப்பிட்ட வயதுவரை நிறைவடைந்திருத்தல் (வயது 14)
- அருள் நிலையில் வாழுதல்
- முறையான மறை அறிவைப் பெற்றிருத்தல்
- உறுதிப்பூசுதல் பெற விருப்பம்
- கிறிஸ்துவின் படைவீரனாக ஆயத்தம் செய்தல்

இ) - உறுதிப்பூசுதலூடாக திருமுழுக்கில் நாம் பெற்ற இறையருள் ஆழப்படுகிறது, வளர்ச்சியடைகிறது.
- திருச்சபையில் முழுமையான அங்கத்துவம் கிடைக்கிறது.
- கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்படுகின்றோம்.
- தூய ஆவியின் கொடைகள் மேலும் வளர்ச்சியடைகிறது.
- முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாகச் சாட்சிய வாழ்வு வாழத் தூய ஆவியின் விசேட சக்தி கிடைக்கிறது

தொடரும் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 சாமுவேல் 13:07 - 21



திருவிவிலியம் கற்போம்

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.07.2018

**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. எபிரேயர்சிலர் யோர்தானைக் கடந்து காத்து, ஒகிலயாது நாடுகளுக்குச் சென்றனர். ........................ இன்னும் கில்காலில் இருந்தார். மக்கள் அனைவரும் நடுங்கிக்கொண்டே அவரைப் பின் சென்றனர். சாமுவேல் குறிப்பிட்டபடி ஏழு நாட்கள் காத்திருந்தார்.

   அ) சவுல் ஆ) சாமுவேல் இ) அரசர்

2. சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை. ஆகவே, மக்கள் சிதறத் தொடங்கினர். அப்போது சவுல் "எரிபலியையும், நல்லுறவுப் பலியையும் என்னிடம் கொண்டுவாருங்கள்' என்று சொல்லி அவ்வாறே ........................ செலுத்தினார். அது முடிவுக்கு வந்தபோது சாமுவேல் அங்கு வந்தார்.

   அ) புகழ்ச்சிப் பலி ஆ) நன்றிப்பலி இ) எரிபலி

3. சவுல் சாமுவேலைச் சந்திக்கச் சென்று வரவேற்றார். ........................, "நீர் என்ன செய்தீர்?" என்று கேட்க, சவுல் "மக்கள் என்னிடமிருந்து சிதறிப்போவதைக் கண்டேன். நீரும் குறித்த காலத்தில் வரவில்லை. பெலிஸ்தியரும், மிக்மாசில் ஒன்று திரண்டு கொண்டிருந்தனர்.

   அ) யோனத்தான் ஆ) சாமுவேல் இ) எருபாகால்

4. அப்பொழுது, 'பெலிஸ்தியர் எனக்கு எதிராகக் கில்காலுக்கு இறங்கி வருவர்: நானோ இன்னும் ........................ தயவை நாடவில்லை' என்று உணர்ந்ததால், நான் எரிபலி செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானேன்' என்றார்.

   அ) கடவுளின் ஆ) ஆண்டவரின் இ) அரசரின்

5. சாமுவேல் சவுலை நோக்கி, "நீர் அறிவீனமாய்ச் செயற்பட்டீர். உம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படி நீர் நடக்கவில்லை. இல்லையேல், ஆண்டவர் இஸ்ரயேல் மீது உமது அரசை என்றென்றும் நிறுவியிருப்பார் . ஆனால், உமது ........................ நிலைக்காது.

   அ) ஆட்சி ஆ) புகழ் இ) அரசு

6. ஆண்டவர் தம் மனதிற்கு ஏற்ப ஒருவரைத் தமக்கெனத் தேடி அவரையே தம் மக்களின் தலைவராக நியமித்துள்ளார். ஏனெனில், ஆண்டவரின் கட்டளைப்படி நீர் நடக்கவில்லை" என்றார். சாமுவேல் எழுந்து கில்காலிலிருந்து பென்யமினைச் சார்ந்த ........................ சென்றார்.

   அ) கில்காலுக்கு ஆ) கிபயாவுக்கு இ) மிக்மாசுக்கு

7. சவுல் வீரர்களைக் கணக்கெடுத்தபோது ஏறத்தாழ ........................ இருந்தனர். சவுலும், அவர் மகன் யோனத்தானும், அவரோடிருந்த வீரர்களும் பென்யமினைச் சார்ந்த கெபாவில் தங்கினர். பெலிஸ்தியர் மிக்மாசில் பாளையம் இறங்கியிருந்தனர்.

   அ) அறுநூறு ஆ) எழுநூறு இ) எண்ணூறு

8. பெலிஸ்தியரின் பாளையத்திலிருந்து மூன்று படைகளாகக் கொள்ளைக்காரர் புறப்பட்டு வந்தனர். ஒரு படையினர் ........................ வழியாகச் சூவால் நாட்டிற்குப் பிரிந்து சென்றனர். இன்னொரு படையினர் பெத்கோரோன் வழியாகச் சென்றனர்.

   அ) கில்கால் ஆ) மிக்மாஸ் இ) ஒபிரா

9. வேறொரு படையினர் பாலைநில கெபோயிமின் பள்ளத்தாக்குக்கு எதிரான எல்லை வழியில் சென்றனர். "எபிரேயர் தமக்காக வாள்களையும், ஈட்டிகளையும் செய்யக்கூடாது' என்று பெலிஸ்தியர் திட்டமிட்டிருந்ததால், இஸ்ரயேல் நாடெங்கும் ........................ காணப்படவில்லை.

   அ) கொல்லன் ஆ) கொத்தன் இ) மேசன்

10. இஸ்ரயேலர் அனைவரும் தமது கலப்பைக் கொழுக்களையும், ........................, கடப்பாரைகளையும், கோடரிகளையும், அரிவாள்களையும் தீட்ட பெலிஸ்தியரிடம் சென்றனர். இவற்றைத் தீட்ட கூலி ஒவ்வொன்றுக்கும் எட்டு கிராம் அளவுள்ள நாணயம் ஆக இருந்தது.

    அ) மண்வெட்டிகளையும் ஆ) முக்கூர்க்கருவி இ) தாற்றுக்கோல்

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 181

பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

சிறுவர்களுக்கு மட்டும் :
முடிவுத் திகதி :
31.07.2018

1. உலகத்தின் கூரை என அழைக்கப்படுவது :
(பமீர் - இமாச்சலம் - ஒரிசா)

2. ஆசியா கண்டத்தின் மிக நீளமான ஆறு:
(கங்கைநதி - ஓப் நதி - மஞ்சள் நதி)

3. அரச வைத்திய சாலைகளில் துறவறக் கன்னியர் பணிபுரிந்த காலப்பகுதி :
(68 வருடங்கள் - 78 வருடங்கள் - 72 வருடங்கள்)

4. இறக்கும் வரை நம் உடலில் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருப்பது:
(காது - தலைமுடி - நகம்)

5. 'அஞ்சிலே அறியாதவன் ஐம்பதிலே ...............?'
(வளைவானா? - கற்பானா? - அறிவானா?)

6. "ஏவல் பன்மை வினைமுற்றுக்குஉதாரணம்:
(சேர்ந்தார்கள் - விளையாடு - போங்கள்)

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 181
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 179,**

பங்கு பற்றியோர் 19 பேர், இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் ஒருவர்.

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 09 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 179 விடைகள்

மாட்டையாவது, ஒடுக்கினேனா?, எக்குற்றமும், ஆரோனையும், எகிப்திலின்று, சீசராவின், ஆண்டவரை, அச்சமின்றி, கலகம், எதிராக

## அறிவை வளர்ப்போம் - 179 விடைகள்

1. கண்டி
2. டிராச்மா
3. வசம்பு
4. 1711.01.16
5. அறிவானா?
6. கேட்போம்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகட்கும் சரியான விடைகளை எழுதி I ம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்

* கீத் செலர்,
K. 9, பனிச்சையடி,
மட்டக்களப்பு.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்

* P. அனஸ்ரிக்கா,
இல. 16/16, வெயிலி குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

* J. மேஷாக்,
385/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

* சு. மொறின் ஜெலோஷன்,
6/52, சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 131 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* அ.அ. டயன்,
22, பழைய கல்முனை வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**

* K. அஸ்விக்கா,
6/50, சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.


**3ம் பரிசு - 200/=**

* க. அபராஜிதன்,
59/1, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனித அந்தோனியார் திருத்தல திருவிழா நிகழ்வின் நிழல்கள்










## மட்டக்களப்பு மறைமாவட்ட வினாவிடைப் போட்டியில் வெற்றிபெற்றோர்



மேல் பிரிவு : 1ம் இடம்
திருக்கோவில் பங்கு

## வாழ்த்துகின்றோம்!

கீழ் பிரிவு : 1ம் இடம்
நாவற்குடா பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media